விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 097 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 12 திங்கட்கிழமை (25.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## இராமர் பாலம் குறித்து முக்கிய பேச்சு
டில்லி செல்கிறார் சாகல ரத்நாயக்க

13ஆம் பக்கம் பார்க்க



## இரு தேர்தலையும் ஒரே நேரத்தில் நடத்துங்கள்
அரசுக்கு சபாநாயகர் மந்திராலோசனை

5ஆம் பக்கம் பார்க்க



## ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்
## மைத்திரிக்கு சி.ஐ.டி அழைப்பு

3ஆம் பக்கம் பார்க்க


# கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் விரைவில் இணக்கப்பாடு
## உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழு நம்பிக்கை

(கொழும்பு)

இந்தியா மற்றும் பாரிஸ் கிளப் நாடுகளுக்கு இலங்கை செலுத்த வேண்டிய கடன் தொகைக்காக ஆறு வருட கால அவகாசம் வழங்குவது டன், கடனை மீளச் செலுத்தும் காலத்தில் வட்டி வீதத்தை குறைப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, கடன் வழங்கும் தரப்பின 04

## தெல்லிப்பழை துர்க்காதேவிக்கு இன்று மகா கும்பாபிஷேகம்



(தெல்லிப்பழை)

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான பஞ்ச ராஜகோபர சகித புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபி ஷேகம் இன்று 25ஆம் திகதி திங்கட் கிழமை பௌர்மணித் திதியும் உத்தர நட்சத்திரமும் சித்தயோகமும் இடப லக்கினமும் பொருந்திய 15

## விவசாயிகளுக்கான செயலி ஜனாதிபதி அங்குரார்ப்பணம்
### ஒட்டகப்புலத்தில் நிகழ்வு

(ஒட்டகப்புலம்)

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸின் வழிகாட்டுதல்களுக்கு அமைய வடிவமைக்கப்பட்ட பார்ம் ரூ கேட் (FARM TO GATE) இணைய செயலியை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு ரார்ப்பணம் செய்து வைத்துள்ளார். 04

## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக
# பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துக!
## பெரமுன யோசனை; எதிர்க்கட்சிகள் மறுப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கலைத்து உடனடியாகப் பொதுத் தேர்தலை நடத்தும் யோசனையை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன முன் வைத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்து வதற்கும் அதற்கான உத்தியோக பூர்வ அறிவிப்பை வெளியிடுவ தற்குமான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும்போது, ஜனாதி பதித் தேர்தலுக்கு முன்னதாக, பாராளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து பொதுத் தேர்தலை முத லில் நடத்துவதற்கான யோச னையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்க்கட்சிகளிடம் முன் வைத்துள்ளது.

ஐக்கியமக்கள் சக்தி, தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி 02

## சட்டவிரோத மணல்
- 6 பேர் கைது
- உழவு இயந்திரம் பறிமுதல்

(மருதங்கேணி)

அம்பன் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆறு உழவு இயந்திரங்கள் மருதங் கேணி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் ஆறு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் 15

## உலக சாதனை நிகழ்த்திய யாழ்ப்பாணத்து நாயகன்



15

## இராணுவ இருப்பைத் தொடர்ந்தும் தக்கவைக்க ஜனாதிபதி முயற்சி
### சி.வி.விக்னேஸ்வரன் கடும் கண்டனம்



(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட தமிழ் மக்களின் விவசாய காணி களில் மக்களுடன் பாதுகாப்பு தரப்பினர் இணைந்து விவ சாய நடவடிக்கைகளில் 15

## அறிவியல் நகர் வளாகம் பல்கலைக்கழகமாக மாறும்
### அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பல்கலைக்கழ கம் விரைவில் உருவாகும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம் பிக்கை வெளியிட்டார்.

யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் 15

## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பெரும் பொங்கல்



15

## வெள்ளவத்தையில் நோலிமிட் முற்றாக எரிந்து நாசம்

(கொழும்பு)




வெள்ளவத்தையிலுள்ள பிரபல ஆடை விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று மாலை பாரிய தீ பரவல் ஏற்பட் 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
14 - 10 - 1946

இறப்பு
24 - 03 - 2024

## திருமதி நகுலேஸ்வரி பாலசுந்தரம்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் மூணாமலை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி பாலசுந்தரம் அவர்கள் 24.03.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - அன்னரத்தினம் தம்பதியினரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற பாலசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரீஸ்கந்தராஜாவின் அன்புச் சகோதரியும் ஜெயந்தி, ஜெயக்குமார் (ஆசிரியர், அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ஜெயவாணி, ஜெயச்சித்திரா, ஜெயரூபன் (ஆசிரிய ஆலோசகர், தீவக வலயம்), ஜெயச்சந்திரன் (தொழில்னுட்ப உத்தியோகத்தர், மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கருணாகரன், திலகராணி (காணிப் பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர், வேலணை பிரதேச செயலகம்), மகேஸ்வரன், நிர்த்திகா, சுகந்தி (உதவி முகாமையாளர், இலங்கை வங்கி) ஆகியோரின் மாமியாரும் திலீபன், ஜெனனி, பாணுகாந், சாயினி, கவினாஷ், சுவஸ்திகா, டிலக்சிகா, பிரித்திகா, மதிசன், சிவாணி, தக்ஷணன், மதுஷணன், விகாஷ், காருண்ஜா ஆகியோரின் பேர்த்தியும் ரெயோன், அயான் ஆகியோரின் பூட்டியும் சுந்தரிஅம்மா, காலஞ்சென்ற காந்திமதி மற்றும் மீனாம்பிகை, கமலாம்பிகை, இராமலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப.10.30 மணிக்கு பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மூணாமலை ஒழுங்கை,
மானிப்பாய்.

(220)

தகவல்:
குடும்பத்தினர்

## பாராளுமன்ற...

ஆகிய எதிர்க்கட்சிகளிடம் மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும் அந்தக் கட்சிகள் பாராளுமன்றத் தேர்தலை முதலில் வைப்பதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில்,

எதிர்வரும் மே மாதம் இடம்பெறவுள்ள வெசாக் பண்டிகையைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அறிய முடிகிறது. (ந-7,10)


இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
SOLA CHEMICAL COMPANY (PVT) LTD

| | | | |
|---|---|---|---|
| கல்சியம் நீக்கி | 4L | ~~2200~~ | 1400 |
| சலவைத் திரவம் | 4L | ~~3200~~ | 1600 |
| மாபிள் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| ஹான்ட் வோஷ் | 4L | ~~2800~~ | 1600 |
| டிஷ் வோஷ் | 4L | ~~1900~~ | 950 |
| டொய்லட் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |

விசேட விலைக் கழிவு

(230)

No.576/2C, Siyambalape road, Heiyanthuduwa, makola.
Reg No. PV00240433

288, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 0866, 0777 495 494

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்





(C-0006)

சந்தைப்படுத்துவோர்:
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(குறிப்பு : சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)
தொ.பேசி : 021 222 2567

Packed By:
ROYAL INDUSTRIES®
COLOMBO - 12
076 668 8025

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை கந்தையா சண்முகலிங்கம் (V.K.Shan)

(ஓய்வு பெற்ற புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர்,
முன்னாள் யாழ் மாவட்ட துடுப்பாட்டப் பயிற்றுனர்(ஸ்ரீலங்கா கிரிக்கெட்),
முன்னாள் வருகை விரிவுரையாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
விளையாட்டு விஞ்ஞான அலகு)

அரியாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகலிங்கம்(இரும்பன்) அவர்கள் 23.03.2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இரத்தினம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற லலிதா (ஓய்வு பெற்ற உப அதிபர் - யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - மகேஷ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் அகிலன் (A/L1991 புனித பத்திரிசியார் கல்லூரி), விமலன் (A/L 1996 புனித பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிறோஜனாவின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராசமணி, கனகம்மா, கனகேஸ்வரி மற்றும் இராஜஇராஜேஸ்வரி, சற்குணவதி, V.K.அரசரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, ஆறுமுகம், சுப்பிரமணியம் மற்றும் நல்லையா காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் சசிவதனி, பத்மினி - இரட்ணலிங்கம், இரவீந்தினி - பேரம்பலம், விஜயா புஸ்பநாதன், சண்முகநாதன் - இராஜினி, ஜெயக்குமார் - மல்லிகா, சாந்தகுமார் - சாந்தகலாதேவி ஆகியோரின் மைத்துனரும் பிரணீஷ், நித்தீஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.03.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் இல.125, திருமகள் வீதி, அரியாலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


125, திருமகள் வீதி,
அரியாலை மத்தி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : மருமகன்
கு.பிரதீபன் - 077 338 9480

(C-0002)

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேகப் பெருவிழா நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

(படங்கள்:-சிவசாந்தன்)

# பெரிய வெங்காய ஏற்றுமதிக்கான தடையை நீடிக்க இந்தியா தீர்மானம்

(கொழும்பு)

பெரிய வெங்காயம் ஏற்றுமதிக்கு இந்தியா விதித்துள்ள தடையை மறு அறிவித்தல் வரை நீடிக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அங்கு விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும், உள்நாட்டுச் சந்தையில் அதிக அளவில் வெங்காயம் கையிருப்பை வைக்கவும் நோக்கமாக கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த டிசெம்பரில், இந்திய அரசு பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு தடை விதித்த நிலையில், எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் இந்த ஏற்றுமதி தடை நிறைவடையவிருந்தது.

இந்தியா விதித்துள்ள இந்த தடையால், பல நாடுகளில் வெங்காயத்தின்விலை உயர்ந்துள்ளது.

மேலும் இலங்கையில் பெரிய வெங்காயத்தின் விலை வேகமாக அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# பாப்பிலோமா தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

மனித பாப்பிலோமா தடுப்பூசிகள் பற்றாக்குறை இருப்பதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

8 மாதங்களாக அந்த தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அதன் தலைவர் நிபுணர் டாக்டர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

இதன் காரணமாக கடந்த வருடம் முதல் தடுப்பூசி போடும் பணி முடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் பாலித மஹிபால கூறுகையில், பல மாதங்களாக இது தொடர்பான தடுப்பூசிகளுக்கு உலகளாவிய ரீதியில் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

எவ்வாறாயினும் முன்பதிவு செய்யப்பட்ட தடுப்பூசிகள் எதிர்வரும் ஏப்ரல் மாத தொடக்கத்தில் இலங்கையில் பெற்றுக்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார். (நி)

# இன்று முதல் மாணவர்களுக்கு மதிய உணவு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் வேலைத்திட்டம் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் உள்ள 17 லட்சம் பாடசாலை மாணவர்களுக்காக இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த வேலைத்திட்டத்திற்காக 26 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும்தெரிவித்துள்ளார். (நி)

# சி.ஐ.டிக்கு அழைக்கப்பட்டார் மைத்திரி



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் குற்றப் புலனாய்வு திணைக்களம் வாக்கு மூலம் பெற உள்ளதாக பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்ன கோன் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, குற்றப் புலனாய்வு திணைக்களம் இன்று இது குறித்துஅவரிடம் வாக்கு மூலத்தை பெற்றுக் கொள்ளவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (நி)

# பிரதமர் சீனாவுக்கு

(கொழும்பு)

பிரதமர் தினேஸ் குணவர்தன இன்று சீனா செல்லவுள்ளார்.

சீனப் பிரதமர் லிக்கிங்கின் அழைப்பின் பேரில் பிரதமர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

மேலும், பிரதமர் தினேஷ் குணவர்தனவிற்கும் சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங்கிற்கும் இடையிலான விசேட சந்திப்பொன்றும் இதன் போது இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)


MATHU DANCE ACADEMY & SIVAM FOUNDATION

336, Kasthuriyar Road, Jaffna. 0779343575



இலைமறை காயாக இருக்கும் Baratham மற்றும் Western மற்றும் Personal Different dance கற்றும் தெரிந்தும் கூட உங்களின் திறமைகளை வெளிப்படுத்த மேடை தேடுபவர்களாக இருந்தால் எமது கல்லூரியுடன் இணைந்து கொள்ளுங்கள்! உங்களின் திறமைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் முன்னுரிமை அளிக்கின்றோம்! சந்தர்ப்பங்கள் தேடி வரும் போது பயன்படுத்துங்கள் அல்லது சாவிலும் தேடி வராது!

Need Coaches to our Academy (Trainers) who are the Western Dancer? நடனத்துறையில் ஆர்வமுள்ளவர்கள்

- Kids Dance Group
- Youth Dance Group
- Weight Lost Dance Group
- Party Dance Group
- Workshop (Baratham & Western)
- You will need the dance performance in the celebrations. When please, contact our dance group. We will accept your Magnet power performance.

(222)

பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளின் நடன ஆற்றலை மேடையேற்ற ஓர் சந்தர்ப்பம்! 1500.00 ரூபா மட்டுமே!
03 வயதில் இருந்து 25 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு மட்டுமே!!!

மாணவர்களே!
உங்களுக்கான புதிய வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

அனைத்து கலைகளையும் ஊக்குவிக்க முயற்சிக்கின்றோம். எம்மை நாடுங்கள்!!!

27.04.24 New class Sat – Sun 4 pm

பதிவுகளுக்கு முந்துங்கள் முதல் பதிவுக்குமட்டுமே - 1000/=



தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக நிகழ்வு சிறக்க வாழ்த்துகின்றோம்



வினோ நகைப்பூங்கா

25.03.2024 இன்று திங்கட்கிழமை மஹா கும்பாபிஷேகம் காணும் தெல்லிப்பளை துர்க்கையம்மன் அருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென வேண்டி வணங்குகின்றோம்





உங்கள் தங்க நகைகளை டிஜிட்டல் முறையில் துல்லியமாக தரம் பார்த்து தரச்சான்றிதழ் வழங்கப்படும்

185, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் கடந்த 24.11.2023 முதல் 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வருகிறது என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.




வினோ நகைப்பூங்கா,
இல. 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5394, 021 222 9494, 074 209 9494

(c-8600)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# அகமதாபாத்தில் குஜராத் 'ஆனந்தம்'

## இறுதி ஓவரில் வீழ்ந்தது மும்பை

விறுவிறுப்பான ஐ.பி.எல்., லீக் போட்டியில் கடைசி ஓவரில் கலக்கிய குஜராத் அணி 6 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது.

அகமதாபாத்தில் நேற்று நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் குஜராத், மும்பை அணிகள் மோதின.

இப்போட்டியைக் காண 81,081 ரசிகர்கள் வந்திருந்தனர். குஜராத் அணிக்கு சகா (19) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். அணித் தலைவர் சுப்மன் கில் (31) நம்பிக்கை கொடுத்தார். ஓமர் ஜாய் (17) சோபிக்கவில்லை. பியுஸ் சாவ்லா பந்தில் ஒரு சிக்சர் அடித்த சாய் சுதர்சன், கோயட்சீ, பாண்ட்யா பந்தில் தலா ஒரு பவுண்டரி விரட்டினார். பும்ரா வீசிய 17வது ஓவரில் டேவிட் மில்லர் (12), சுதர்சன் (45) ஆட்டமிழக்க குஜராத்தின் ஓட்ட வேகம் குறைந்தது. அடுத்து வந்த ராகுல் டிவாட்யா (22) ஓரளவு கைகொடுத்தார்.




குஜராத் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களை எடுத்தது.

சவாலான இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு இஷான் கிஷான் (0) ஏமாற்றினார். நமன் திர் (20) ஓரளவுக்கு கைகொடுத்தார். பின் இணைந்த ரோகித் சர்மா, பிரேவிஸ் ஜோடி எளிதாக ஓட்டங்கள் சேர்த்தது. 3ஆவது விக்கெட்டுக்கு 77 ரன் சேர்த்த போது சாய் கிஷோர் "சுழலில்" ரோகித் (43) சிக்கினார். பிரேவிஸ் (46), மோகித் சர்மாவிடம் சரணடைந்தார்.

டிம் டேவிட் (11) சோபிக்கவில்லை. திலக் வர்மா (25) நம்பிக்கை தந்தார். கடைசி ஓவ ரில் வெற்றிக்கு 19 ஓட்டங்கள் தேவைப் பட்டன. உமேஷ் யாதவ் பந்துவீசினார். முதலிரண்டு பந்தில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த அணித் தலைவர் பாண்ட்யா (11), 3வது பந்தில் அவுட்டானார். அடுத்த பந்தில் சாவ்லா (0) வெளியேறினார். கடைசி 2 பந்தில் 9 ஓட். தேவைப்பட, 2 ஓட். மட்டும் கிடைத்தது.



மும்பை அணி 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 162 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. ஆட்டநாயகன் விருதை சாய் சுதர்சன் வென்றார்.(7,10)

**லங்கா மஹால் (PVT) LTD**

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 0091956615 6719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974

(235)

## சண்முகலிங்கம் காலமானார்



(யாழ்ப்பாணம்) ஓய்வுபெற்ற புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தரும் முன்னாள் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுநரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் முன்னாள் வருகை விரிவுரையாளருமான கந்தையா சண்முகலிங்கம் நேற்று முன்தினம் (23) காலமானார். அவருக்கு வயது 78.

வட மாகாணத்தில் பல கிரிக்கெட் வீரர்களை உருவாக்கிய முன்னாள் வேகப் பந்துவீச்சாளரான அவரின் இறுதிக் கிரியைகள் நாளை (26) செவ்வாய்க் கிழமை அரியாலையில் உள்ள அவருடைய இல்லத்தில் நடைபெறும். (ந-10,7)

## விவசாயிகளுக்...

யாழ்ப்பாணம் ஒட்டகப்புலம் பகுதியில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வின்போது, இந்த இணைய செயலி மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளுக்கான இணைய வழி சந்தை வாய்ப்புகளுக்கு வசதியளிக்கும் வகையில் "பார்ம் ரூ கேட்" இணைய செயலி வடிவமைக்கப் பட்டுள்ளது.

இணைய செயலி அங்குரார்ப்பண நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரால் செயலியின் பயன்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த புதிய செயலியின் ஊடாக சிறு விவசாயிகள், பண்ணை முயற்சியாளர்கள், வீட்டுத்தோட்ட முயற்சியாளர்கள், ஏனைய உற்பத்தி முயற்சியாளர்கள் நுகர்வோருடன் நேரடியாக இணைக்கப்படுவார்கள் எனவும் இதனூடாக இடைத்தரகர்களின் தலையீடு குறைக்கப்படும் எனவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலகுவான சந்தைப்படுத்தல் மற்றும் சந்தை வாய்ப்பை அதிகரித்தல், உற்பத்திக்கான நியாயமான விலையை பெற்றுக் கொடுத்தல், பொருளாதாரத்திற்கு வலுவூட்டுதல் மற்றும் நிலைபேறான வளர்ச்சி என பல விடயங்கள் இந்த புதிய செயலியில் காணப்படுகிறது.

அந்தவகையில், "பார்ம் ரூ கேட்" இணைய செயலி இணையதளமாக மாத்திரமன்றி பொருளாதார மாற்றத்திற்கான உந்துதலாகவும் அமையும் என வடக்கு மாகாண ஆளுநர் தனது உரையில் தெரிவித்துள்ளார். (ந-10,7)

## கடன் மறுசீரமைப்...

ருக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் நல்ல நிலையில் இருப்பதாகவும், கடனுக்கான விதிமுறைகள் குறித்த முறையான இணக்கப்பாடுகள் மிக விரைவில் எட்டப்படும் எனவும் உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு கடன் வழங்கிய 17 நாடுகள் கடந்த 2023ஆம் ஆண்டு கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை எளிதாக்குவதற்காக இந்தக் குழுவை அமைத்தன.

இந்தக் குழுவில் இருந்து சீனா விலகியுள்ள போதிலும், அவதானிப்பாளராக விவாதங்களில் பங்கேற்றுள்ளது.

இதனிடையே, சீனக் கடனை மறுசீரமைப்பது குறித்து இரு நாடுகளின் அரசாங்கங்களும் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாக குறிப்பிடும் உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழு, எதிர்காலத்தில் சீனாவுடன் ஒரு உடன்பாட்டை எட்டப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடனான ஒப்பந்தங்களை முடிவுக்கு கொண்டுவருதல் மற்றும் பிரதான தனியார் கடன் வழங்குநர்களுடன் கொள்கையளவில் உடன்படிக்கைகளை மேற்கொள்வது இலங்கையின் பொருளாதார மீட்சித் திட்டத்தில் ஒரு முக்கியமான படியாக இருக்கும் என்று சர்வதேச நாணய நிதியம் (IMF) தெரிவித்துள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது. (ந-7,10)

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 . 03 . 1941 | 20 . 03 . 2024 |

### திருமதி வேலுப்பிள்ளை விசாலாட்சி

வட்டுக் கிழக்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை விசாலாட்சி அவர்கள் கடந்த *20.03.2024ஆம் திகதி புதன்கிழமை அன்று சிவபதமடைந்தார்.*

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான வைத்தி - வேலாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் சரஸ்வதி, இராசமலர், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (துரை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, கந்தையா, இராசலட்சுமி, தியாகராசா மற்றும் சின்னத்துரை, நடராஜா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் விமலா, வைத்தீஸ்வரன், விஜயா, கோமதி, வளர்மதி ஆகியோரின் ஆருயிர்த் தாயாரும் பாலசுப்பிரமணியம், ராஜினி, ஜெயராஜா, நந்தகுமார், கௌரிபாலன் ஆகியோரின் அன்பு மாமியும் அருண்பிரகாஷ், கஜானி, பூரணன், வெண்ணிலன், பிறையவன், காவியன், காருனியன், கோதிஷா, யதுஷா, வேய்ங்குழலி, நறுமுகி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (26.03.2024) செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வட்டுக் கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(234)

*தகவல்:-* **பிள்ளைகள்**
*தொ.பே:* **077 541 0745**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தில் பாரிய ஊழியர் வெற்றிடம்

(கொழும்பு)

அரசாங்கத் தொழிற்சாலைகள் திணைக்களத்தில் பாரிய ஊழியர் வெற்றிடம் நிலவுவதாக தெரியவந்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்தியானந்த அண்மையில் கொலன்னாவையிலுள்ள அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்துக்கு மேற்கொண்ட கண்காணிப்பு விஜயத்தின் போது இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தின் அனுமதி பெற்ற அலுவலக ஊழியர்கள் 769ஆக இருந்த போதிலும், தற்போது 311 பேர் மட்டுமே பணிபுரிந்து வருவதாக தெரியவந்துள்ளது.

எனவே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கையை முன்வைத்து தேவைக்கு ஏற்ப ஊழியர்களை பணியமர்த்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்தியானந்த தெரிவித்துள்ளார். (நி)

# இலங்கையின் பொருளாதாரம் இன்னும் ஆபத்தான நிலையில்

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

பொருளாதாரம் இன்னும் ஆபத்தான நிலையில் இருந்து மீளவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.



அனுராதபுரத்தில் வைத்து நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில், பொருளாதார ரீதியில் ஆபத்தான நிலையில் இருந்து நாடு இன்னும் மீளவில்லை. அடுத்த தேர்தலில் நாட்டின் பொருளாதாரம் முக்கியபிரச்சினையாக பேசப்படும்.

பொருளாதாரத்தைக் கையாளும் திறன் உள்ளவர்களே ஆட்சிக்கு வரவேண்டும். தொலைநோக்குப் பார்வையே பிரதானமாக இருக்க வேண்டும்.

ஏனெனில் பொருளாதாரம் இன்னும் ஆபத்தான நிலையில் இருந்து மீளவில்லை என குறிப்பிட்டுள்ளார். (நி)

# மகளிர் தினம்

(சாவகச்சேரி)

கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரிப் பிரதேச சபையும் கைதடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியமும் இணைந்து நடத்தும் மகளிர் தின நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு கைதடி விநாயகர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கைதடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியத் தலைவி திருமதி சுபத்திராதேவி தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுதாகர் சுனேஸ்ரா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (நி-30)


# வவுனியாவில் இடம்பெற்ற ரெலோவின் 11 ஆவது தேசிய மாநாடு



(வவுனியா)

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) 11 ஆவது தேசிய மாநாடு வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், கோவிந்தம் கருணாகரம், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், செயலாளர் சிவசக்தி ஆனந்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டனர். (நி-250)



இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் தெரிவுகளின் தேசிய மட்ட தெரிவுகள் 09.12.2023 அன்று கொழும்பு இராம கிருஸ்ண மிஷனில் நடைபெற்றது.

இதில் யாழ் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த கோட்டை முனியப்பர் கோவில் அறிநெறிப்பாடசாலை மாணவன் அறிவு ஆதித்தன் பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார்.

# இரு தேர்தலையும் ஒரே நேரத்தில் நடத்துங்கள்

## சபாநாயகர் ஆலோசனை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் நடத்துமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு தேர்தல் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு இரண்டையும் ஒன்றாக நடத்துவதால் செலவை மீதப்படுத்த முடியும் என்று கூறிய சபாநாயகர், இரண்டு தேர்தல்களையும் தனித் தனியே நடத்தினால் அதிக பணம் செலவாகும் என்று தெரிவித்துள்ளார். நாடு தற்போது இருக்கின்ற நிலையில் இரண்டையும் ஒன்றாக நடத்துவதே சிறந்தது என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (நி)

# இராசிபலன்

25.03.2024
பங்குனி 12, திங்கட்கிழமை
பூரணை பிற்பகல் 1.01 மணிவரை

உத்தரம் முற்பகல் 11.06 மணிவரை
சுபநேரம் -12.15-1.45 மணிவரை
இராகுகாலம்-7.45-9.15 மணிவரை

சந்திராஷ்டமம்
திருவோணம், அவிட்டம்.

வளவன்

**மேஷம்** — நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் கூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**ரிஷபம்** — வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு.

**மிதுனம்** — இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** — பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** — ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பேச்சில் இனிமை தென்படும், சான்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** — பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு, குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.

**துலாம்** — மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், புண்ணிய காரியங்களுக்குச் செலவு செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தினரின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**விருச்சிகம்** — தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பெருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், விருந்தினர் வருகையுண்டு.

**தனுசு** — எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** — புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியம் சீராகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கும்பம்** — கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, தேக நலனில் கவனம் தேவை.

**மீனம்** — இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், கௌரவமான நாள்.

அமைதியான உள்ளமே மகிழ்ச்சிக் கடலின் எல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் தொடர்பான விழிப்புணர்வு பேரணி




(வவுனியா)

வவுனியாவில் காசநோய் தொடர் பான விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

வவுனியா காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கே.சந்திரகுமார் தலைமையில் "ஆம் எங்களால் காசநோயை முடிவுக்கு கொண்டு வர முடியும்" எனும் தொனிப் பொருளில் உலக காசநோய் தினமான நேற்று விழிப்புணர்வு கருத்துரைகள் இடம்பெற்றதுடன் விழிப்புணர்வு ஊர்வலமும் நடைபெற்றது.

இதில் காசநோய் கட்டுப்பாட்டு பிரிவு வைத்தியர்கள், தாதியர்கள், தாதிய மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-250)



யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பாடசாலை முதல்வர் அ.ஆனந்த ராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்களுக்கான சின்னம் சூட்டப்பட்டது. (படம்- கிருஷ்ணகுமார்)

## அனுமதிப் பத்திரங்கள் இன்றி

# பனைமரக் குற்றிகளை எடுத்துச் சென்றவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உரிய அனு மதிப் பத்திரங்கள் இன்றி வாகனத் தில் சீவிய பனை மரங்களை எடுத்து சென்ற நபர் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸாரிடம் கையளிக்க ப்பட்டுள்ளார்

வாகனத்தில் இருந்து 55 சீவிய பனை மரங்களை தாம் மீட்டுள்ள தாகவும் அவற்றின் பெறுமதி சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் என பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்துள்ளது டன் யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி-33)

# கற்றல் உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கி வைப்பு



(சாவகச்சேரி)

உடுவில் கிழக்கு மற்றும் இணுவில் கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை தலா நான்காயிரம் ரூபாய் பெறுமதியான கற்றல் உப கரணங்கள் வழங்கி வைக் கப்பட்டுள்ளன.

கனடா நாட்டில் வசிக்கும் புலம்பெயர் உறவுகளான சிவசங்கர், கஜன், லலிதா, கஜேந்திரன் மற்றும் சுதாகர் ஆகியோரின் நிதிப்பங்க ளிப்பில் மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-30)

# சாவகச்சேரியில் உள்ள வர்த்தக நிலையங்களில் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட இரு வர்த்தக நிலையங் களில் கடந்த வெள்ளிக்கிழமை பணம் திருடப்பட்டிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய ப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கச்சாய் வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பகல் வேளையில் கடையில் இருந்து ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பணம் திருடப்பட்டுள்ள அதே வேளையில்

கைதடிப் பகுதியில் உள்ள வர் த்தக நிலையம் ஒன்றில் இருந்தும் ஐம்பதாயிரம் ரூபாய் பணம் திருட ப்பட்டிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


மேற்படி திருட்டுச் சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணை களை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 150 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 160 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 250 | 180-230 | 300 |
| தக்காளி | 140 | 100 | 150 | 80-110 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 120 | 120-140 | 200 |
| கோவா | 300 | 300 | 350 | 320 | 400 |
| கரட் | 300 | 450 | 450 | 420 | 500 |
| பூசணி | 180 | 200 | 180 | 120-150 | 200 |
| புடோல் | 150 | 160 | 150 | 140 | 120 |
| வாழைக்காய் | 150 | 180 | 150 | 120-150 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 200-300 | 250 |
| பெரிய வெங்காயம் | 600 | 600 | 500 | 440 | 550 |
| பாகற்காய் | 350 | 300 | 350 | 250-440 | 300 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 100-170 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 350 | 470 | 350 |
| லீக்ஸ் | 300 | 320 | 350 | 250 | 350 |
| பீற்றூட் | 300 | 200 | 300 | 200 | 300 |
| கறிமிளகாய் | 400 | 300 | 350 | 350 | 400 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 600 | 500-800 | 1000 |
| போஞ்சி | 300 | 250 | 300 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 150 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 80 | 40-60 | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 80-200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 130 | 100 | 50-125 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 400 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 150 | 110 | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 50 | 100 | 60 |
| ஈரப்பலா | 100 | -- | -- | 80 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வலி/புன்னாலைக்கட்டுவன்
சித்திவிநாயகர் வித்தியாலய ஆசிரியரான

திரு.சிவனேசராஜா
வினோதரன்

N.D.T.(Merit),B.Ed.(Second upper)

அவர்கள் 16.03.2024 அன்று
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
நடைபெற்ற 38 ஆவது பட்டமளிப்பு விழாவில்
முதுகல்விமாணி(M.Ed.Second upper)
பட்டத்தினைப் பெற்றமையைப் பாராட்டி
வாழ்த்துவதுடன் மேலும் பட்டங்களையும்
பதவிகளையும் பெற வாழ்த்துகின்றோம்.


வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக் கழகம்.
யா/வலி/ புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு-சுன்னாகம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வேலாயுதம் மகாவித்தியாலயம் பருத்தித்துறை



திரு.ந.செந்தூரன்
B.B.A, PGDE, M.Ed



திரு.சி.ரஜினிகாந்
B.A,M.A,PGDE,MEd


Best Wishes

எமது பாடசாலை ஆசிரியர்கள் திரு.ந.செந்தூரன், திரு.சி.ரஜினிகாந் ஆகியோர் 16.03.2024 அன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 38 ஆவது பட்டமளிப்பு விழாவில் "கல்விமுதுமாணி" பட்டம் பெற்றதையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.


(ச-8599)

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிச்சங்கம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதிபர்-திரு.வேலுப்பிள்ளை
உதயமோகன்
B.BA(Hons),PGDEd,M.Ed



ஆசிரியர்-திரு.தெசராசசிங்கம்
ஜெயக்குமார்
B.A.spl, PGDEd M.Ed

Best Wishes

எமது பாடசாலை அதிபர் திரு.வேலுப்பிள்ளை உதயமோகன் அவர்களையும் ஆசிரியர் திரு.தெசராசசிங்கம் ஜெயக்குமார் அவர்களையும் M.Ed பட்டம் பெற்றமையை இட்டு மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(26)

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/இணுவில் இந்துக் கல்லூரி.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கைதடி குருசாமி வித்தியாலய ஆசிரியர்

திருமதி. சரோசினி
கலானந்தன்

(SLTS-1,Tr.Ed(primary),B.A,PGDE,M.Ed)

அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில்
16.03.2024 சனிக்கிழமையன்று
நடைபெற்ற 38 ஆவது பட்டமளிப்பு விழாவில்
கல்வியியலில் முதுமாணி (M.Ed ) பட்டத்தைப்
பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு
மேலும் பல பட்டங்களையும்
பதவியுயர்வுகளையும் பெற்றுயர
மனதார வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர் :
ஆசிரிய நண்பர்கள்

(224)

## மகாகும்பாபிஷேகப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான எண்ணெய்க் காப்பு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 6 முதல் மாலை 4 மணிவரையும், நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.15 மணிமுதல் 11.06 வரை கும்பாபிஷேகமும் நடை பெறும் என ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (நி)

# மணிவிழா வாழ்த்து



16.02.2015 தொடக்கம் எமது பாடசாலையில்
அர்ப்பணிப்புடன் சேவையாற்றி 25.03.2024 இன்று
சேவையிலிருந்து ஓய்வுபெறும் சிரேஷ்ட ஆசிரியை

திருமதி. மங்கையர்திலகம்
பரமானந்தம் (SLTS-I)

அவர்களது ஓய்வுக்காலம் சிறக்க
உளமார வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்

- யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் 1988.08.17-1991.12.31-
- பாலாலி ஆசிரியர் கலாசாலை 1992.01.01-1993.12.31-
- யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை 1994.01.01-2006.01.03-
- யா/கோப்பாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை 2006.01.04-2015.02.15-
- யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் 2015.02.16-2024.03.25-

(179)

வாழ்த்துவோர்:-ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு :1982 - இந்து
நட்சத்திரம் -மிருகசீரிடம்
உயரம் : 5'7"
தகைமை/தொழில்: civil Engineer,TO
எதிர்பார்ப்பு- படித்த பெண்
தொ.இ: B/14320

பிறப்பு:1993-இந்து
நட்சத்திரம்: பூராடம்
உயரம் :5'6"
தகைமை/தொழில்- கடை (பிரான்ஸ்)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14323

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா:
உயரம் :5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி, DO
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/14326

பிறப்பு: 1979- இந்து
நட்சத் திரம் : அச்சுவினி
தகைமை/தொழில்:- Canada(PR)
எதிர்பார்ப்பு: படித்த குணமுள்ள பெண்
தொ.இ: B/14328

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997 -இந்து
நட்சத் திரம் : ரோகினி
கி.பா-14 1/2
உயரம் : 5'4"
தகைமை/தொழில்:. HND IT,pvt
எதிர்பார்ப்பு: வெளிநாடு,அரச தொழில்
தொ.இ: G/14232

பிறப்பு-1985-இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: - 36
உயரம் : 5'2"
தகைமை/தொழில்: பட்டதாரி,IT Teacher
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14241

பிறப்பு -2001 - இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: -
உயரம் :5'3"
தகைமை/தொழில்: university(2years)
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14245

பிறப்பு -1996 -இந்து
நட்சத்திரம் - திருவாதிரை
உயரம் : 5'4"
தகைமை/தொழில்:இயன்மருத்துவர்
எதிர்பார்ப்பு: படித்த ஆண்
தொ.இ: G/14252

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாரதம்

## பூட்டானின் உயரிய விருது
## பிரதமர் மோடிக்கு வழங்கி வைப்பு

(பூட்டான்)

பூட்டானின் மிக உயர்ந்த சிவில் விருதான "ஆர்டர் ஆஃப் திட்ருக் க்யால்போ" விருதை பிரதமர் நரேந்திர மோடிக்கு பூட்டான் மன்னர் கௌரவித்தார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக பூட்டானுக்கு சென்றார். அங்கு பிரதமர் மோடியை அந் நாட்டு பிரதமர் ஷெரிங் டோப்கே வரவேற்றார். மேலும் பிரதமர் மோடிக்கு அந்நாட்டு அரசு சார்பில்




உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிலையில், பூட்டானின் மிக உயர்ந்த சிவில் விருதான "ஆர்டர் ஆஃப் திட்ருக் க்யால்போ" விருதை பிரதமர் நரேந்திர மோடிக்கு பூட்டான் மன்னர் வழங்கினார். இந்த கௌரவத்தைப் பெற்ற முதல் வெளி நாட்டு அரசாங்கத் தலைவர் என்ற பெருமையைப் பிரதமர் நரேந்திர மோடி பெற்றார்.

இந்த விருதானது வாழ்நாள் முழுவதும் சிறந்த சாதனைகள் மற்றும் சமூகத்துக்கு அளித்த பங்களிப்புகளை குறிப்பதற்காக வழங்கப்படுகிறது.

"ஆர்டர் ஆஃப் தி ட்ருக் க்யால்போ" விருது இதுவரை, நான்கு புகழ்பெற்ற நபர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கடந்த 2008ஆம் ஆண்டில் பூட்டானின் ராணி பாட்டி ஆஷி கேசாங் சோடன் வாங்சுக், அதே ஆண்டில் பூட்டானின் மத்திய மடாலய அமைப்பின் 68 ஆவது தலைமை மடாதிபதி (ஜே கென்போ) ஜே திரிஸூர் டென்சின் டென்டுப், கடந்த 2018ஆம் ஆண்டில் ஜே கென்போ ட்ருல்கு நாகாங் ஜிக்மே சோய்ட்ரா ஆகியோர் இந்த விருதைப் பெற்றுள்ளனர். (நி)

## நைஜீரியாவில் கடத்தப்பட்ட மாணவர்கள் விடுவிப்பு



(நைஜீரியா)

கடந்த 7 ஆம் திகதி நைஜீரியாவின் வடமேற்கு நகரமான குரிகாவில் கடத்தப்பட்ட சுமார் 300 மாணவர்கள் விடுவிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கரிஜா நகரில் இருந்து கடத்தப்பட்ட மாணவர்கள் விடுவிக்கப்பட்டதாகவும் மாணவர்களுக்கு எந்த பாதிப்பும் இன்றி விடுதலை செய்வதற்காக நடவடிக்கை மேற்கொண்ட நைஜீரிய அதிபருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் ஆளுநர் உபா சானி தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற கடத்தல் சம்பவங்கள் அரசுக்கு பெரும் தலைவலியாக உள்ளது. சமீபகாலமாக நாட்டின் வடமேற்கு பகுதி மற்றும் மத்திய பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஆயுதக்குழுவினர் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். (நி)

## மொஸ்கோ தாக்குதலில் உயிரிழப்பு அதிகரிப்பு

(மொஸ்கோ)

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இசை நிகழ்ச்சியொன்றில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 143 ஆக உயர்ந்துள்ளது.

மொஸ்கோவின் கிராக்கஸ் சிட்டி ஹால் அரங்கில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி அரங்கத்துக்குள் நுழைந்த பயங்கரவாதிகள் அங்கிருந்தவர்கள் மீது, துப்பாக்கிச் சூடு மற்றும் வெடிகுண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இப் பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 143ஆக உயர்ந்துள்ளதுடன் பலர் படுகாயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

மேலும் இந்த தாக்குதலில் நேரடியாகத் தொடர்புடைய 11பேர் உட்பட4 துப்பாக்கிதாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (நி)

## மொ...
## உரிமை...
### ரஷ்யாவுக்கா...

(மொஸ்கோ) —
மொஸ்கோ இசை...
ஐ. எஸ். ஐ. எஸ். சே...
கண்டறிந்துள்ளது.



சிரியாவை மையமாக கொண்டு செயற்படும் ஐ.எஸ் அமைப்பின் பல்வேறு கிளை அமைப்புகள் உலகம் முழுமைக்கும் செயற்பட்டு வருகின்றன.

மொஸ்கோ மீது பயங்கரவாத

## உக்ரைனின் மின் உற்பத்தி நிலையங்கள் மீது தாக்குதல்
### 10 லட்சம் பேர் பாதிப்பு

(கீவ்)

உக்ரைனின் மின்சக்தி உற்பத்தி நிலையங்களை இலக்கு வைத்து ரஷ்யா நடத்திய தாக்குதலில் ஐவர் உயிரிழந்துள்ளதுடன், சுமார் 10 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உக்ரைனின் நீர் மின் நிலையம் உட்பட அந்நாட்டின் மின்சாரக் கட்டமைப்பின் மீது ரஷ்யா ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இதில்10 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களின் வீடுகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி விளாடிமீர் ஜெலென்ஸ்கி குற்றம் சுமத்தியுள்ளார்.



மின் உட்கட்டமைப்பைக் குறிவைத்து ரஷ்யா 60 ட்ரோன்களையும், சுமார் 90 ஏவுகணைகளையும் வீசி தாக்குதல் நடத்தியது.

இதுபோன்ற சரமாரியான வான்வழித் தாக்குதல்களை எதிர்கொள்வதற்குத் தேவையான வான்பாதுகாப்பு ஏவுகணைகளை மேற்கத்தேய நாடுகள் உடனடியாக வழங்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். (நி)

## பப்புவா நியூகினியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

(இந்தோனேசியா)

பப்புவா நியூகினியாவின் வடக்கே தொலைதூரப் பகுதியில் அதிகாலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அம்புந்தி பகுதியில் இருந்து வடகிழக்கே 32 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்ட இந்நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 6.9 ஆக பதிவாகி உள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்நிலநடுக்கம் 35 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தாலும் இதனால் யாருக்கும் பாதிப்பு ஏற்பட்டதாக தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை.

அத்தோடு நிலநடுக்கத்திற்கான தாக்கம் அதிகம் ஏற்பட கூடிய பகுதியில் பப்புவா நியூகினியா உள்ளமை குறிப்பிடத்தக்கது.


தென்கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் பெருங்கடலோர பகுதிக்குட்பட்ட நிலநடுக்கம் அதிகம் ஏற்படகூடிய இடத்தில் அது அமைந்துள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரலில் இதுபோன்று பப்புவா நியூகினியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டதுடன் இது ரிக்டரில் 7.0 ஆக பதிவாகி இருந்தது. மேலும் குறித்த அனர்த்தத்தில் சிக்கி ஏழு பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாஸ்கோ தாக்குதலுக்கு
# ம கோரியது ஐ.எஸ்.ஐ.எஸ்-கே

## கான தலைவலி ஆரம்பமா?




சைக்கச்சேரி தாக்குதலின் பின்னணியில்
. கே பயங்கரவாத அமைப்பு இருப்பதாக
து.



தாக்குதலை தொடுத்திருக்கும் ஐ. எஸ். ஐ. எஸ். கே என்பது ஐ.எஸ் அமைப்பின் ஆப்கானிஸ்தான் கிளையாக செயற்பட்டு வருகிறது. ஐ.எஸ்.ஐ.எஸ்.கே என்பதில் உள்ள கே, கோரசன் என்பதைக் குறிக்கிறது. இது ஈரான், துர்க்மெனிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானை உள்ளடக்கிய அகண்ட தேசத்தைக் குறிக்கும் ஆதிப்பெயராகும்.

அகண்ட இஸ்லாமிய தேசத்தை உருவாக்குவது, இஸ்லாத்தின் எதிரிகளை அழிப்பது ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு ஐ.எஸ்.ஐ.எஸ்.கே செயற்பாடு அமைந்துள்ளது. இத்தகைய செயற்பாடுகள் அனைத்துமே துப்பாக்கி முனையில் நிகழ்த்தப்பட்டு வருவதால் உலகம் நிம்மதி இழந்து வருகிறது. சிரியாவில் தலைவிரித்தாடிய ஐ.எஸ் அமைப்பு சிதைக்கப்பட்டதும், அதிலிருந்து தெறித்தோடிய சிலர் 2014 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கிழக்கு ஆப்கானிஸ்தானை மையமாகக் கொண்டு ஐ.எஸ்.ஐ.எஸ்.கே அமைப்பை நிறுவினர்.

ஈரானில் சுமார் 100 பேரைக் கொன்ற இரட்டை குண்டு வெடிப்பு, காபூலில் உள்ள ரஷ்ய தூதரகத்தில் நடந்த தற்கொலை குண்டுவெடிப்பு, காபூல் சர்வதேச விமான நிலையத்தின் மீதான தாக்குதலில் 13 அமெரிக்க துருப்புக்கள் மற்றும் ஏராளமான ஆப்கானிஸ்தானியர் பலியானது ஆகியவற்றின் பின்னணியில் ஐ.எஸ்.ஐ.எஸ்.கே உள்ளது.

வழக்கமாக இதுபோன்ற பயங்கரவாதக் குழுக்களின் பின்னணியில் அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசு தேசங்களே மறைந்திருக்கும். உதாரணமாக ஆப்கானிஸ்தானில் தாலிபன்கள் உருவானதன் பின்னணியில் அமெரிக்கா இருந்தது. ரஷ்யாவுக்கு எதிரான பனிப்போரின் அங்கமாக, தாலிபன்களுக்கு ஆயுத உதவி மற்றும் பயிற்சிகளை அமெரிக்கா வழங்கியிருந்தது. ஆனால் அதே அமெரிக்காவுக்கு எதிரான நிலைப்பாடினை தாலிபன்கள் பிற்பாடு எடுத்தனர். இந்த வகையில் ரஷ்யாவுக்கு எதிரான திடீர் எதிர்ப்பு நிலையை ஐ.எஸ்.ஐ.எஸ்.கே கொண்டுள்ளது. இதன் பின்னணியில் மேற்கு நாடுகள் இருக்கின்றனவா என்ற ஐயம் ரஷ்ய உளவுத்துறைக்கு உண்டு.

அதற்கேற்ப ரஷ்யாவுக்கு எதிராகவும் அதன் ஜனாதிபதி புடினுக்கு எதிராகவும் ஐ.எஸ்.ஐ.எஸ்.கே தொடர்ந்து மிரட்டல்களை விடுத்து வந்தது. ரஷ்யாவில் இஸ்லாமியர்களை ஒடுக்கும் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாகவும், புடின் அரசாங்கம் இதற்கு உடந்தையாக இருப்பதாகவும் ஐ.எஸ்.ஐ.எஸ்.கே குற்றம்சாட்டி வந்தது. இந்த எதிர்ப்புணர்வை தங்கள் மொழியில் தெரிவிக்கும் வகையில் மாஸ்கோ மீதான தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ்.கே தற்போது நிகழ்த்தி உள்ளது. (நி)

## கடல்களை ஆக்கிரமிக்கும் சீனா
## கடும் கண்டனம் வெளியிட்ட பிலிப்பைன்ஸ்

(மணிலா)

தென்சீனக்கடல் பகுதியில் சென்ற பிலிப்பைன்ஸுக்கு சொந்த மான சிறிய படகின் மீது சீன போர்க்கப்பல்கள் தண்ணீர் பீரங்கி மூலம் தாக்குதல் நடத்தியமைக்கு பிலிப்பைன்ஸ் இராணுவம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.




பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தென்சீனக் கடல் பகுதி முழுமைக்கும் சீனா உரிமை கொண்டாடி வருகிறது. அத்துடன் பிலிப்பைன்ஸ், மலேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளும் அதற்கு உரிமை கோருகின்றன.

குறிப்பாக சர்ச்சைக்குரிய இரண்டாவது தாமஸ் ஷோல் பகுதி பிலிப்பைன்ஸ் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே பிலிப்பைன்ஸ் கடற்படைக்கு சொந்தமான படகுகள் அங்கு ரோந்துபணியில்ஈடுபடுகின்றன.

அந்த படகில் உள்ளவர்களுக்கு சிறிய படகுகள் மூலம் உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கொண்டு செல்லப்படுகிறது. அந்த வகையில், நேற்றுமுன் தினம் பிலிப்பைன்ஸுக்கு சொந்தமான சிறிய படகு சென்ற போது சீன போர்க்கப்பல்கள் அவர்கள் மீது தண்ணீர் பீரங்கி மூலம் தாக்குதல் நடத்தியது.

இதில் அந்த படகு பலத்த சேதம் அடைந்தது. சீனாவின் இந்த தாக்குதலுக்கு பிலிப்பைன்ஸ் இராணுவம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது இந்த மாதத்தில் நடைபெற்ற சீனாவின் 2ஆவது [illegible] (நி)

## ரஃபா மீது தாக்குதல் நடத்தினால் தனிமைப்படுத்தப்படும் அபாயம்
### இஸ்ரேலுக்கு அமெரிக்கா எச்சரிக்கை



(வோஷிங்டன்)

ரஃபா மீது தாக்குதல் நடத்துவதுதான் ஹமாஸ்க்கு எதிரான இலக்கை முழுமையடையச் செய்யும் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. மேலும், அங்குள்ள மக்களை பாதுகாப்பாக வெளியேற்ற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிடம் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு இந்த கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

காசாவில் உள்ள பெரும்பாலான மக்கள் ரஃபா பகுதியில்தான் உள்ளனர். இஸ்ரேல்ரஃபா மீது தாக்குதல் நடத்தினால் மிகப்பெரிய உயி[illegible] ஏற்படும். மனிதா[illegible]பிமான உதவிகள் கிடைக்கப் பெறாமல் மக்கள் பெரிதும் அவதிப்படுவார்கள். அதனால் ரஃபா மீது தாக்குதல் நடத்தும் திட்டத்தை கைவிட வேண்டும் என ஜோ பைடன் நெதன்யாகுவிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் மத்திய கிழக்கு பகுதியில் அமைதியை வலியுறுத்தி அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி ஆண்டனி பிளிங்கன் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். நேற்று முன்தினம் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை சந்தித்தார். அப்போது ரஃபா மீது தாக்குதல் நடத்தப்பட்டால் உலகளவில் தனிமைப்படுத்தும் நிலை அபாயம் ஏற்படும் என எச்சரித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெப்ப காலத்திற்கு உகந்த வில்வம் பூ, வில்வம் பழத்தினது மருத்துவக் குணங்கள்





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

வில்வம் பூ எப்பொழுதும் சிவனுக்கு பிரியமானது. மருத் துவ குணங்கள் மிக்கது. அதாவது தெய்வீக மூலிகைகளுள் முதன் மையானது.வில்வமரத்தின் எல்லா பகுதிகளும் குளிர்ச்சியை உண்டாக்கக் கூடியது. சிவன் சுடர்நிலை தெய்வமாகும். இத னால் சிவலிங்கத்திற்கு வில்வம் இலைகளால் அரச்சனை செய்யப் படுகின்றது. ஏனெனில் சிவம் சுடர்நிலை தெய்வமாகும் எனவே குளிரச்சியான வில்வமிலைக ளால் சுடர் நிலையான அக்கினித் தன்மையைக் குறைக்க அர்ச்ச னை செய்யப் படுகின்றது .

வில்வம் பழத்தை ஆங்கிலத்தில் Bael Fruite/stone apple என குறிப்பிடுவார். வில் வம் பழத்தின் மண மும் சுவையும் விரும்ப கூடியதாக இருக்கும். வில்வம்பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் தோலை மிருதுவாக வைத்து இருப்பதுடன் இரத்தத்தை சுத்திகரிக்க கூடியதாக இருக்கும்.

100 கிராம் வில்வம் பழத்தில் சக்தி- 136 கி.கலோரி, புரதம்-1.8 கிராம், கொழுப்பு- 0.3 கிராம், காபோ வைதரேற்31.4 கிராம், நார்ச்சத்து 2.7 கிராம், பொட்டாசியம்- 600 மில்லி கிராம், பொஸ்பரஸ்- 50 மில்லி கிராம், கல்சியம் 81.4 மி.கி, உயிர்ச்சத்து 'C'- 8.4 மில்லி கிராம்.





ஆதி யில் வில்வம்பழத்தை King of fruite (ராஜாபழம்) என்று அழைத்தனர். வயிற்றுப்புண் உடையவர்கள் வில்வம் பழம் கிடைக்கக் கூடிய காலங்களில் வில்வம் பழத்தை சர்க்கரை சேர்த்து சாப்பிடலாம். அல்லது வில்வம் பழச்சதையை பிசைந்து சாறு எடுத்து பனை வெல்லம் அளவாக சேர்த்தது மணப்பாகு போல் காய்ச்சி தினமும் எடுத்து வர வயிற்றுப் புண் ஒன்றாக ஆறும். வெயில் காலங்களில் வரும் "ஹீட் ஸ்ட்ரோக்" பிரச்சி னைக்கு வில்வம்பழம் சிறந்த மருந்து. குடற் புண்களை சீக்கிரம் ஆற்றும் தன்மை கொண்டது.

குறிப்பாக சாப்பிட்டவுடன் ஏற்படும் வயிற்றுப் போக்கு பிரச்சினை களை குணமாக்கும். இதில் டானின் என்ற சத்து இருக்கிறது. வில்வம் பழத்தில் இருக்கும் துவர்ப்பு சுவை உடலின் தசைகளை சுருக்கும். வில்வம்பழம் சாப்பிட்டால் ஆண் மைக்குறைவு ஏற்படும் என்பது தவறான கருத்து. கார் போகரிசி, வெந்தயம் பால், வில்வம் பழம், சேர்த்து அரைத்து தலைக்கு தேய்த்து குளித்தால் நன்றாக முடி வளரும். கண் நோய்கள் வராமல் தடுக்க கூடியது.

வில்வம் பழத்தை ஓடு நீக்கி பழத்தை தீயில் சுட்டு பின்பு தண்ணீர் சேர்த்து கொதிக்க வைத்து வில்லம் தேநீராக குடிக்கலாம். உடலில் அதிகரித்த உஷ்ணத்தை நீக்கி உடலை குளிர்ச்சியாக வைத்திருக்க உத வும். கோடை காலத்தில் உகந்த ந்த வில்லம் பழயூஸ் தயாரிப்பது, பழுத்த வில்லம் பழ சதைகளை கரண்டியால் வடித்து ஒரு பாத்திர த்தில் போட்டு இளம் சூட்டு நீர் விட்டு தேவையான அளவு சீனியும் சேர்த்து நன்றாக மசித்து வடித்து குளிர் சாதனப் பெட்டியில் வைத்தும் பருகலாம்.

சாதாரணமாக குளிரூ ட்டியில் வைக்கா மலும் பயன்படுத் தலாம். வெப்ப காலத்தில் ஏற் படும் வைரஸ் தொற்றுக்கள் , முல நோய் ,குடற் புண் போன்றவற்றை நீக்கி உடலிற்கு பலத்தை கொடுக்க கூடியதுமாகும்.

இது ஓர் காய கற்ப மூலியுமாகும். நீரிழிவு நோயாளிகளும் நன்றாக பழுக்காத வில்வம் பழத்தை சாப்பிடலாம். ஈரலை பாதுகாக்கக் கூடியது. வில்லம் பழத்தை பசும்பாலில் கலந்து அதில் சிறிது மிளகு தூள் கலந்து சாப்பிட்டு வந்தால் முல நோய் விரைவில் குணமாகும் .

வைகாசி மாதங்களில் வில்வை பூக்கும். இவ் வெப்பமான காலங்களில் வில்வம் பூக்களை சேகரித்து உடன் பூக்களாவோ அல்லது உலர வைத்த பூக்களாகவோ பயன்படுத்தலாம். மிகவும் குளிர்ச்சியானது. வில்வம் பூ தேநீர் வெப்ப காலத்திற்கு மிகவும் உகந்த பானமாகும்.

ஒரு தேக்கரண்டி உலர்ந்த வில்வம் பூக்களை ஒரு பாத்திரத்தில் இட்டு 200 மில்லி நீர் விட்டு கொதிக்க வைத்து வடிகட்டி ஒரு சிறிய கருப்பட்டி துண்டுடன் குடித்து வர உடலிற்கு குளிர்ச்சியை கொடுப்ப தோடு தேக பலத்தையும் அதிகரிக்க செய்யகூடியது.

வில்வம் பழம் ,வில் வம்பூக்கள் இரண்டுமே ஜீரண மண்டலத்தை சுத்தம் செய்யக் கூடி யது. பெண்கள் கட்டாயமாக இந்தப் பழத்தை சாப்பிட வேண்டும்.கர்ப்பப் பையை பலப்படுத்த கூடியது.

நிறைய வில்வம் பழங்கள் கிடைக்கும் போது பழங்களை உடைத்து,பழ சதைகளை கரண்டியால் வடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு வைத்து கொண்டு இன்னொரு பாத்திரத்தில் நீர் விட்டு கொதிக்க வைத்து கொதித்ததும் இறக்கி அள வான சூடு இறங்கியதும் பழச் சதைகளை போட்டு பிசைந்து கரைத்து வடி கட்டி அளவான கற்கண்டு அல்லது சீனி போட்டு அரைத்து அடுப்பேற்றி பதத்தில் (பாகுபதம்) இறக்கி ஆற விட்டு குளிரூட்டியில் வைத்து கொள்ளலாம்.

தேவையான போது நீர், சீனி சேர்த்து யூசாக கரைத்து பருகலாம். வெப்ப காலத்திற்கு மிகவும் உகந்த கனிவில்லை ஆகும்.

# இன்று ஒரு தகவல் 75



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பட்டினி பயன் தரும்

சார் சாப்பிடாமல் இருந்து பாருங்கள் அதனாலே கிடைக்கிற சௌகரியம் நிறைய இருக்கிறது. நமக்கு தெரிந்தும் தெரியாமலும் நமது உடம்பிற்குள்ளே எவ்வளவோ கோளாறுகள் இருக்கலாம்.

எல்லாவற்றையும் செலவு இல்லாமல் சரி செய்வதற்கு ஒரு சிறந்த வழி சாப்பிடாமல் இருக்கிறது தான்.

உடம்பிலே உண்டாகக்கூடிய நோய், சுகக்கேடு இதையெல்லாம் இயற்கையாகவே ஜீவ அணுக்கள் சரி செய்துவிடும்.

உண்ணா நோன்பு என்பது உடற்கூற்று ரீதியான ஓய்வு என்று சொல்லுகிறார்கள். இது நோயைக் குணப்படுத்துகிறது. அதுமட்டுமில்லை நோய் வராமல் தடுக்கிறது. சாப்பிடாமல் இருந்து தான் பிரார்த்தனை, தியானம் இவையெல்லாம் செய்வார்கள்.

இது வெறும் தெய்வீகம் மட்டுமில்லை விஞ்ஞானம் கலந்த தெய்வீகம்.

சாப்பிட்டு தியானம் செய்கிறேன்.பிரார்த்தனை செய்கியிறேன் என்று ஆரம்பித்தால் உங்களுக்கு தெய்வீக சிந்தனை வராது தூக்கம் தான் வரும்!

தூங்கி விழிப்பீங்க மறுபடியும் சாப்பிடலாம் என்று தோன்றும்.

உடம்பிலே உண்டாகிற தேவையில்லாத கழிவுப்பொருள் நீங்குவதற்கு பட்டினி அவசியம்.

இயற்கை வைத்தியத்திலே உண்ணா நோன்பு ஒரு முக்கியமான சிகிச்சை.

உண்ணா நோன்பு எப்ப இருக்கிறது? எப்படி இருக்கிறது? அது நோயோட தன்மையைப் பொருத்தது.

சரி சாப்பிடாமல் இருப்பதற்கு நான் .தயார் என்று துணிச்சலாக கையைத் தூக்கிறவர்கள் மட்டும் முன்னால் வாருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள்.

எப்ப ஆரம்பிக்கிறது? எப்படி முடிக்கிறது? இதைப் பற்றி நீங்க கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும். குளிர் காலத்தில் இது வேண்டாம். உடம்பில் போதுமான சக்தி இல்லையா அப்படி என்றால் இது உங்களுக்கு வேண்டாம். நீங்கள் பட்டினி கிடந்து ஏற்கனவே இருந்த கொஞ்ச நஞ்ச சக்தியையும் விட்டு விட்டு என்னிடம் சண்டைக்கு வருவீர்கள். நரம்புத் தளர்ச்சி, பயந்தசுபாவம், கோபதாபம் அதிகமாக உள்ளவர்கள் விலகிக் கொள்ளங்கள். உங்களுக்கும் இது வேண்டாம். முதல் தடவையாக உண்ணாவிரம் இருக்க போகிறீர்களா அப்படி என்றால் நீங்கள் ஒரு வரை முறை வைத்து கொள்ளுங்கள். வாரத்தில் ஒரு நாள் சாப்பாட்டை நிறுத்துங்கள். அதற்கு பதிலாக பழச்சாறு மட்டும் குடியுங்கள். முதலில் காலை உணவை கை விடுங்கள். அதன் பின்பு மதிய உணவை நிறுத்துங்கள். பின்பு பழச்சாறு மட்டும் குடித்து கொண்டு ஒருநாள் முழுவதும் சாப்பிடாமல் இருங்கள். இப்படி படிப்படியாக வரவேண்டும். சாப்பிடாமல் இருக்கும் போது நீங்கள் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா அதிர்ச்சி ஆரவாரம் இவை எல்லாம் கூடாது. அமைதியான சூழ்நிலை வேண்டும் நல்ல காற்றோட்டம் வேண்டும் அதிக ஈரமான அல்லது அதிக வெது வெதுப்பு அளிக்கக்கூடிய ஆடைகளை அணியக்கூடாது. சுத்தமான குடி நீர் பருக வேண்டும். மனதில் நல்ல நம்பிக்கையும் பூரண ஓய்வும் மிகவும் முக்கியம். உண்ணா விரதத்திற்கு முன்னரும் பின்னரும் ஒரு வார காலத்திற்கு கெட்ட பழக்கம் எதுவும் இருக்க கூடாது. உண்ணாவிரதத்தை முடிக்கும் போது பழச்சாறு, இளநீர் என்று ஏதாவது குடிக்கவேண்டும்.

உண்ணாவிரதம் இருக்கும் போது உங்கள் உடம்பில் சில அறிகுறிகள் தெரியலாம். தலைச்சுற்றல் , தலைவலி, பலவீனம் , இதய படபடப்பு, நாக்கில் மா படிவது, சுவை இல்லாமல் போவது இது மாதிரி அறிகுறிகள் இருக்கலாம். அதற்காக கவலைப்பட வேண்டாம். உடல் வெப்பநிலை, நாடித்துடிப்பு, இரத்த அழுத்தம் இவை எல்லாம் வித்தியாசமாக இருக்கலாம். இயற்கை வைத்தியம் என்ன சொல்கிறது என்றால் உடம்பில் சேர்ந்த நச்சுக் கழிவுகள் எல்லாம் உண்ணா நோன்பு காலத்தில் வெளியேற்றப்படும். உடற் பருமனை குறைப்பதற்கு உண்ணா நோன்பும் உணவுக்கட்டுப்பாடும் ஒரு நல்ல வழி. இடைவெளி விட்டு இருக்கும் விரதத்தினால் உடலிற்கு புதிய உற்சாகம் ஏற்படும். எடை குறையும். உண்ணாவிரதத்தினால் என்ன சௌகரியம் தெரியுமா உடல் உறுப்புகளிற்கு ஓய்வு கிடைக்கும். உடம்பில் சேர்ந்த நச்சுப் பொருளும், கெடுதல் செய்யும் பக்றீறியா பொருட்களும் வெளியேறுகிறது.

நோய்க்கு இது ஒரு நல்ல சிகிச்சை. மன நோயைக் கூட இது கட்டுப்படுத்துகிறது.புகையிலை போதைப் பொருள் பழக்கதில் இருந்து விடுபட இது உதவுகிறது.

எடை குறைகிறது! தோற்றப் பொலிவு கிடைக்கிறது! உற்சாகம் வருகிறது. ஐம்புலன்களுக்கும் புத்துணர்ச்சி கிடைக்கிறது.

அதனால் சாப்பிடாமல் இருப்பதற்கு யார் யார் எல்லாம் தயார் முன்னால் வாங்க பார்க்கலாம்.

என்ன சார் இது எல்லோரும் போயிட்டீங்க!

இங்கே நான் மட்டும் தனியாக நின்று கத்திக் கொண்டு இருக்க வேண்டியது தானா?

என்ன இது கத்தி கத்தி எனக்கும் பசி எடுக்கிற மாதிரி இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோளப் பயிற்செய்கைக்கான விதை பதப்படுத்தும் நிலையம்

## விவசாய அமைச்சரால் வவுனியாவில் திறந்து வைப்பு



(நெளுக்குளம்)


சோளப் பயிற்செய்கைக்கான விதை பதப்படுத்தும் நிலையம் விவசாய அமைச்சர் மகிந்த அபயவீரவினால் வவுனியாவில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியாவிற்கு விஜயம் செய்த விவசாய அமைச்சர் மகிந்த அபயவீர பூவரசன்குளம் பகுதியில் மேற்கொள்ளப்படும் நல்லின சோளப் பயிற்செய்கை நிலங்களை பார்வையிட்டதுடன், பயிற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

இதில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ் குமார், செட்டிகுளம் பிரதேச செயலாளர் இ.பிரதாபன், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(நி-250)

# புதிய சாளம்பைக்குளத்தில் நடைபெற்ற இப்தார் நிகழ்வு



(நெளுக்குளம்)

வவுனியா, புதிய சாளம்பைக் குளம், மஸ்ஜிதுல் அக்ஸா ஜீம்மா பள்ளியில் நேற்று முன்தினம் இப்தார் நிகழ்வு சிறப்பாக இடம் பெற்றது.

வவுனியா மாவட்ட ஜம்மியதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷேக் என்.பி.ஜீனைத் மதனியின் பங்கேற்புடன் நடைபெற்றது.

நோன்பு இருந்த அக்கிராம மக்கள் மாலை 6.25 இற்கு மஸ்ஜிதுல் அக் ஸா ஜீம்மா பள்ளிக்கு வருகை தந்து இப்தார் நிகழ்வில் பங்குபற்றியதுடன், தொழுகையிலும் ஈடுபட்டனர். இதில் வவுனியா பல்கலைக்கழக இஸ்லாமிய மாணவர்கள், புதிய சாளம்பைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

(நி-250)

# ரவி கருணாநாயக்க கிளிநொச்சி விஜயம்

(கண்டாவளை)

கிளிநொச்சிக்கு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளதுடன் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் விசேட வழிபாட்டிலும் கலந்து கொண்டுள்ளார்

நேற்றுக் காலை 9 மணிக்கு விஜயம் செய்த அவர் கிளிநொச்சி கந்தசாமி ஆலயத்தில் நடைபெற்ற விசேட வழிபாடுகளில் கலந்து கொண்டு தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சென்று அங்கே புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் பெண் நோயியல் வைத்திய சாலையினையும் பார்வையிட்டு தேவைப்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார்.

(நி-315)

# ஆர்.ஆர் நினைவாக இலவச குடிநீர் திட்டம்

(நெளுக்குளம்)


தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் முக்கியஸ்தர் வேலாயுதம் நல்லநாதர் (ஆர் ஆர்) நினைவாக இலவச குடிநீர்த்திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா, கோவில்குளத்தில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன் நினைவு இல்லத்தில் குறித்த இலவச குடிநீர்த்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், தாகசாந்தி நிலையமும் திறந்து வைக்கப்பட்டது. (நி-250)



# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3070

தமிழ்




வசந்




நிருஜா




சர்மிளா




டில்சன்




டிலான்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 437





அவர் உன்னைப் பாராத போது அவரை நீ பார்க்கலாம். அவர் மீது பட்டு வரும் காற்று உன்மீதும் படும். அவருடைய குரல் உன் காதில் அடிக்கடி கேட்கும். அடி பெண்ணே! நீ கண்டு வந்த எட்டாத கனவில் ஒரு சிறிது நிறைவேறும். பிறகு அது எப்படியானால் என்ன? பூங்குழலி! ஒத்துக்கொள்!' என்று அந்த மெல்லிய குரல் அவள் மனக் காதில் கூறியது.

சமுத்திரகுமாரி! ஏன் தயங்குகிறாய்? எனக்கு இந்த உதவி நீ செய்ய மாட்டாயா? நானே வழி கண்டுபிடித்துக் கொண்டு போக வேண்டியதுதானா? என்று இளவரசர் கூறியது அவளுடைய மனம் திடமடையக் காரணமாயிற்று. இளவரசே! வழிகாட்ட நான் வருகிறேன் என்றாள்.

சேனாதிபதி பூதிவிக்கிரம கேசரி அப்போது தம் தொண்டையைக் கனைத்துக் கொண்ட சப்தம் பூகம்பம் ஏற்படுவதற்கு முன்னால் பூமியின் கர்ப்பத்திலிருந்து எழுகின்ற பயங்கரத் தொனியை நிகர்த்திருந்தது. அவர் ஓர் அடி முன்னால் வந்து கூறினார்.

இளவரசே! தங்கள் விருப்பத்துக்குக் குறுக்கே நான் நிற்கமாட்டேன். ஆனாலும் என் வேண்டுகோள் ஒன்றுக்குச் செவி சாய்க்க வேண்டும். தங்களைச் சிறைப்படுத்த வந்திருப்பவர்களிடம் தங்களை ஒப்படைக்கும் வரையில் தங்களைப் பாதுகாப்பது என் பொறுப்பு. நேற்றிரவு தங்களைக் கொல்ல நடந்த முயற்சிகளைப் பற்றிச் சற்று முன்னால் தங்கள் தோழர்கள் சொன்னார்கள். அந்தக் கொலைகாரர்கள் இன்னும் பிடிபடவில்லை. அவர்கள் யாரென்று தெரியவும் இல்லை.

என் மனத்தில் உள்ளதைச் சொல்வதற்காக மன்னியுங்கள். இந்தப் பெண்ணின் பேரிலேயே எனக்குக் கொஞ்சம் சந்தேகமுண்டு. அந்தக் கொலைகாரர்களுக்கு இவளும் ஒருவேளை உடந்தையாயிருக்கலாம் அல்லவா? மரக்கலங்களில் தங்களைச் சிறைப்படுத்தி அழைத்துப்போக வந்திருக்கிறார்கள் என்பதே இவளுடைய கற்பனையாயிருக்கலாம் அல்லவா.

ஏன் இருக்கக் கூடாது? சற்றுமுன்னால் இவளுடைய கத்தியைத் தங்கள் தோழர் வந்தியத்தேவர் பிடுங்கி எறிந்தபோது, அது யார் பேரிலோ விழுந்து ஒலக் குரல் கேட்டதே? அது யாருடைய குரல்?

இந்தப் பெண் தாராளமாக வழிகாட்டிக் கொண்டு வரட்டும். நம்முடைய யானை மேல் ஏறிக் கொண்டு முன்னால் செல் லட்டும். ஆனால் தங்களுடன் நானும் தொண்டைமான் ஆற்றில் உள்ள கப்பல்களைக் காணும் வரையில் வந்தே தீருவேன்! அது என்னுடைய கடமை!"

இந்தப் பேச்சைப் புன்னகை பூத்த முகத்துடன் கேட்டுக் கொண்டு நின்ற இளவரசர் அப்படியே ஆட்டும்! தங்களுடைய கடமையை நிறைவேற்றுவதற்கு நானும் குறுக்கே நிற்கவில்லை!" என்றார்.


மேற்கண்டவாறு முடிவு ஏற்பட்டதும் சேனாதிபதி பூதி விக்கிரமகேசரி பார்த்திபேந்திரனை தனியாக அழைத்துச் சென்று சிறிது நேரம் அந்தரங்கமாகப் பேசினார். பின்னர் தம்முடன் வந்த படை வீரர்களுக்குத் தனித்தனியே சில கட்டளைகளை பிறப்பித்தார். பார்த்திபேந்திரன் இளவரசரிடம் விடைபெற்று கொண்டான். ஐயா நான் வந்த காரியம் நிறைவேறாமல் வெறும் கையோடு திரும்புகிறேன். இதற்காக கரிகாலர் என்னை மிகவும் கோபித்து கொள்ளப் போகிறார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நேர்மை



ஓர் ஊரில் நல்லரசன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் பெயருக்கு தகுந்தாற்போல் நற்குணங்கள் பெற்றவனாக இருந்தான். ஏழை எளியவர்களிடம் அன்பு காட்டும் குணமும் மற்றவர்களுக்கு உதவும் உயர்ந்த மனப்பான்மை அவனிடம் இருந்தன.

யாராவது தவறு செய்தால் அதனை தட்டிக் கேட்கும் துணிவும் அவனிடம் இருந்தது. அதனால் அந்த ஊர் மக்கள் நல்லரசன் மேல் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார்கள். அந்த ஊரில் வசதியாக வாழ்ந்து வந்த சிலர் நல்லரசனின் செல்வாக்கு கண்டு அவர் மீது பொறாமை கொண்டனர்.

அவர் புகழை கெடுப்பதற்கு தங்களால் முயன்ற முயற்சிகளை எல்லாம் செய்தார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சிகள் யாவும் தோல்வியிலே முடிந்தன. பணக்காரர்கள் ஆகிய தங்கவேலும், கருப்பு சாமியும் இதனால் மனம் புழுங்கினர்.

ஏதேனும் ஒரு செயல் செய்து நல்லரசனை அவமானப்படுத்த வேண்டும் என்று துடியாய் துடித்தனர். அந்த பணக்காரர்களுக்கு நல்லரசன் எந்த தீங்குமே செய்யவில்லை. ஆனால் கோயில் திருவிழாவாக இருந்தாலும், வேறு பொதுச் செயல்களாக இருந்தாலும் அந்த நல்ல அரசனுக்கே அனைவரும் முதல் மரியாதை கொடுத்தார்கள். இதைத் தான் அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

எப்படியாவது அந்த நல்லரசனை பழிவாங்க வேண்டும் என்று [illegible] முனியாண்டி என்பவனை அழைத்து பேசினார்கள். அந்த முனியாண்டிக்கு ஊர் மக்களிடம் நல்ல பெயர் இருந்தது. அவனை பகடைக்காயாய் பயன்படுத்தி அந்த நல்லரசனை வீழ்த்தி விடலாம் என்று அவர்கள் எண்ணினார்கள்.

தங்கவேலும் கருப்புசாமியும் ஒன்று சேர்ந்து சதித்திட்டம் ஒன்றை தீட்டினார்கள். முனியாண்டியை தங்கள் வீட்டில் அழைத்து பேசினார்கள். முனியாண்டி எங்களுக்காக நீ ஒரு செயல் செய்ய வேண்டும். என்று கூறி கட்டுக்கட்டாக ரூபாய் நோட்டுகளை அவன் கையில் திணித்தனர்.

ரூபாய் நோட்டுகளை பார்த்ததும் முனியாண்டிக்கு ஆசை அதிகமானது. அவன் அவர்களை நோக்கி, உங்களுக்காக எதை வேண்டுமானாலும் செய்வேன் என்றான். உடனே அவர்கள் அவனைப் பார்த்து இந்த வல்லரசன் தன்னை உத்தமன் போல் காட்டிக் கொண்டு, எங்களுக்கு இந்த ஊரில் மரியாதை இல்லாமல் செய்கிறான்.

அவனுக்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டும். அதற்கு தான் உன்னுடைய உதவி தேவை என்றனர். மேலும் அவர்கள் தங்களுடைய சதித்திட்டத்தை அவனிடம் விளக்கி கூறினார்கள். எங்களுடைய மூன்று லட்சம் ரூபாய் பணத்தை எப்படியாவது அந்த நல்லரசனின் வீட்டில் நீ வைக்க வேண்டும்.

நாங்கள் பொலிஸில் புகார் கொடுத்து அவனை கைது செய்கிறோம் அவன் மூன்று லட்சம் ரூபாயை திருடியதற்கு நீ பொய் சாட்சி சொன்னால் போதும். மற்ற விடயங்களை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று தங்கவேலும் கருப்புசாமியும் முனியாண்டியிடம் கூறினார்கள்.

முனியாண்டி அவர்களைப் பார்த்து நீங்கள் சொல்வது போலவே செய்கிறேன் என்று கூறிவிட்டான். தங்கவேலும் கருப்புசாமியும் இதைக் கேட்டு மகிழ்ந்தார்கள். இந்த சதி திட்டம் அவர்களின் எண்ணம் போலவே நடந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
>
> – காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அறப்பணி மூலம் வாழ வைக்கும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன்

தெல்லிப்பழை என்றதும் நம் மனங்களில் தோன்றுவது தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயமாகும்.

இலங்கையில் எத்தனையோ சைவாலயங்கள் உள்ள போதிலும் தெல்லிப்பழை என்றதும் துர்க்கையம்மன் ஆலயம் நம் கண் முன் தோன்றுவதற்குக் காரணம் அந்த ஆலயம் செய்கின்ற அறப்பணியாகும்.

ஆம், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் ஆற்றுகின்ற அறப்பணியானது, ஈழத்திலுள்ள அத்தனை சைவாலயங்களுக்கும் முன்மாதிரியானது.

நம் மண்ணில் சைவம் நிலைக்க வேண்டுமாயின், மதமாற்றம் தடுக்கப்பட வேண்டுமாயின் ஆலயங்கள் அறப்பணி செய்ய வேண்டும்.

இருந்தும் எங்கள் மண்ணில் ஆலயங்கள் அறப் பணியாற்றவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக உள்ளன.

இங்குதான் எங்கள் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் நிமிர்ந்து நிற்கிறது.

ஆம், ஆதரவற்ற பெண்பிள்ளைகளை ஆலய வளாகத்தில் தங்க வைத்து அவர்கள் கல்வி கற்பதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து அவர்கள் பல்லைக்கழகம் சென்று பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற அளவில் ஆலயம் அனைத்து வசதிகளையும் வளங்களையும் செய்து வருகிறது.

இன்றைய காலகட்டத்தில் இருக்கக்கூடிய சட்டதிட்டங்கள், அரச அலுவலர்களின் கெடுபிடிகள் என அனைத்துக்கும் ஈடுகொடுத்து மனம் சளைக்காமல் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய பரிபாலன சபை செய்கின்ற அப்பெரும் பணிக்கு ஈழத் தமிழ் மக்கள் அனைவரும் இருகரம் கூப்பி நன்றி செலுத்த வேண்டும்.

ஆம், பேச்சால் – புராணபடனங்களால் மக்களின் கஷ்டங்களும் தேவைகளும் தீரப் போவதில்லை.

மாறாக, மக்களின் தேவையறிந்து அவர்களுக்கு உதவுவதன் மூலமே மக்களின் கஷ்டங்கள் தீர்க்கப்படும்.

அந்த வகையில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் எத்தனையோ பெண் பிள்ளைகளின் தாயாக வீற்றிருந்து அந்தப் பிள்ளைகளை வாழ வைக்கின்றார்.

உண்மை. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய பெண்கள் இல்லத்தில் இருக்கக் கூடிய பெண் பிள்ளைகளைப் படிக்க வைத்து, அவர்களை வாழ வைத்து, அவர்களுக்கு காணி வழங்கி வீடு கட்டிக்கொடுத்து அவர்கள் எந்தக் குறையுமின்றி வாழ்வதற்கு வழி செய்யப்படுகிறதெனில், அதற்கெல்லாம் மூலகாரணமாக இருப்பது எங்கள் அன்னை துர்க்கா தேவியின் தாயுள்ளம் என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர்.

ஆம், சிவத்தமிழ் அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் முன்னெடுத்த ஆலயப் பணியை – அறப் பணியை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் தொடர்ந்து மேற்கொள்வதுடன் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளையும் அறப் பணிகளையும் மனித மொழிகளால் விதந்து பேச முடியாத அளவுக்கு உன்னதமாக முன்னெடுத்துச் செல்வது உண்மையில் போற்றுதற்குரியது.

இத்தகு அறப்பணிகள் ஒழுங்கு சீராக நடந்தேறுவதற்கு ஆலய பரிபாலன சபையும் இந்து இளைஞர்களும் தெல்லிப்பழை மக்களும் துர்க்கை அம்மனின் அடியார் பெருமக்களும் சிவாச்சாரியர்களும் வழங்குகின்ற பணி ஏனைய ஆலயங்களும் அறப்பணியை பின்பற்றுவதற்கு ஊக்கமளிப்பதாகவுள்ளது.

இத்தகு சிறப்புடைய தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு இன்று நடைபெறும் மகா கும்பாபிஷேகம் எங்களை நிச்சயம் வாழவைக்கும் என்பதோடு, அந்த ஆலயத்தின் அறப்பணி பற்றி ஏனைய ஆலயங்களும் இந்நாளில் சிந்தனை செய்ய வேண்டும்.

# இலங்கை-இந்தியா இடையிலான பாலம் குறித்து முக்கிய பேச்சு

## டில்லி செல்கிறார் சாகல

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாலம் அமைக்கும் திட்டம் குறித்து கலந்துரையாடல் இவ்வாரம் இடம்பெறவுள்ள நிலையில், இதில் பங்கேற்பதற்காக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரத்நாயக்க நாளை மறுதினம் புதன்கிழமை டில்லிக்கு செல்கிறார்.

இரு நாட்கள் டில்லியில் தங்கியிருக்கும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க அந்நாட்டு தலைவர்களுடன் இருநாடுகளுக்கு இடையிலான பாலத்தை கட்டுவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய இந்திய விஜயத்தின்போது இரு நாடுகளுக்கு இடையில் பாலம் அமைப்பது குறித்து பிரதமர் நரேந்திர மோடியுடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் இலங்கையின் தலைமன்னாரிலிருந்து, இந்தியாவின் இராமேஸ்வரம் வரையில் இந்த பாலம் அமைக்கப்படவுள்ளது.

வாகன போக்குவரத்துக்கு மாத்திரமன்றி, இருவழி புகையிரத பாதையும் இந்த பாலத்தின் ஊடாக நிர்மானிக்கப்பட உள்ளது.

இதேவேளை, இலங்கைக்கும் இந்தியாவுக்குமான உத்தேச பாலத்தின் ஊடான நில இணைப்பை மையப்படுத்தி, தலைமன்னார் தொடக்கம் திருகோணமலை ஊடாக கொழும்பு வரையிலான விசேட நேரடி நெடுஞ்சாலை போக்குவரத்து கட்டமைப்பும் உருவாக்கப்படவுள்ளது.

முதல் கட்டமாக தலைமன்னாரிலிருந்து திருகோணமலை துறைமுகம் வரையிலான வீதி கட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம், இந்தியாவுக்கு இருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு செல்லும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க, டில்லியில் உயர் மட்ட பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளார்.

இந்த பாலம் ஊடாக இரு நாட்டு பொருளாதார மேம்பாடு மற்றும் மக்கள் தொடர்புகளை வலுப்படுத்த முடியும் என்று இருதரப்பும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த பாலத்தை அமைப்பதற்கான பூர்வாங்க ஆய்வு நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பொருளாதார மறுசீரமைப்பின் பலன் விரைவில் மக்களுக்கு கிடைக்கும்

## ஜனாதிபதி நம்பிக்கை

(கொழும்பு)

பொருளாதார மறுசீரமைப்பு திட்டத்தின் மூலமே நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது.

கடந்த பொருளாதார நெருக்கடியில் நாம் அனுபவித்த துன்பங்களை அடுத்த தலைமுறைக்கு பெற்றுக்கொடுக்காமல் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்திற்கு ஆதரவளிப்பது அனைவரினதும் பொறுப்பு.

அரசாங்கம் மேற்கொண்டுவரும்புதிய பொருளாதார மறுசீரமைப்பு செயற்பாட்டின் பலன் இன்னும்சில வருடங்களில் மக்களுக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே சிறந்த எதிர்காலத்தை உருவாக்க எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பதை இளைஞர்கள் தீர்மானிக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை வெற்றியடைந்துள்ள நிலையில் கடன் வழங்கிய நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடல்களின் பின்னர் நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு அந்த நாடுகள் மீண்டும் துணை நிற்கும் என எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தில் இருந்து ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்திற்கு நாம் செல்ல வேண்டும்.

அதற்கு நகரத்தில் மட்டுமின்றி கிராமத்திலும் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். (நி)

### காலநிலை மாற்றத்தால்

# பாதிக்கப்படும் நாடுகளில் 10 நாடுகளில் இடம்பிடித்தது இலங்கை

(கொழும்பு)

உலகலாவிய ரீதியில் காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படும் பத்து நாடுகளில் இலங்கையும் உள்வாங்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தின் காலநிலை தலைவர் எரான் விக்கிரமரத்ன மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரான ருவான் விஜேவர்தன ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை குறைப்பதற்கு பாராளுமன்றம் உள்ளக அமைப்புகளுடனும் ஏனைய நாடுகளுடனும் இணைந்து செயற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரம ரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு காலநிலை மாற்றத்தால் அதிகரிக்கும் வெப்பநிலையானது பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும்.

இதன் காரணமாக பல்வேறு இழப்புக்கள் ஏற்படலாம். அதன்படி, 2050 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காலநிலை மாற்றம் ஒரு சத வீத இழப்பை ஏற்படுத்தும் என்று அவர் கூறியிருந்தார். (நி)

# ஜனாதிபதி வேட்பாளருக்கு தகுதியானவர் ரணிலே

## பசில் அதிரடிக் கருத்து

(கொழும்பு)

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து விரட்டியது தமிழ் – முஸ்லிம் மக்கள் தான் என்று கோட்டாபய ராஜபக்ஷ அவரது "சதி" என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதை ஏற்க முடியாது என்றும் அவர்கள் தான் விரட்டினார்கள் என்று தான் கருதவில்லை என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்குக் கருத்துக் கூறுகையில்,

ஜனாதிபதி வேட்பாளருக்குத் தகுதியானவர் ரணில் விக்கிரமசிங்க தான். பொருளாதார ரீதியில் வீழ்ச்சிப் பாதையில் சென்ற இந்த நாட்டை அவர் மீட்டெடுத்திருக்கிறார். அனைத்துப் பிரச்சி னைகளும் மெல்ல தீர்ந்து கொண்டு வருகின்றன.

முதலில் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடு. இதை நான் ஜனாதிபதி ரணிலிடம் கூறியிருக்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

29



பிறமொழிகள் அதில் வழங்கும் துறைசார்ந்த சொற்களை நேரடியாகப் பயன்படுத்தும் நிலையில் தமிழில் அதனைப்பொருளுணர்ந்து கணியம், கணினி, கணிப்பொறி எனஆக்கம்செய்து பயன்படுத்தல் ஒன்றே தமிழின் பிறமொழி கலவாத் தனிந்தன்மையை விளங்கிக் கொள்ளத்தக்கது.

**8. இலக்கியவளம்**

தமிழர் தமிழ் இனம் எனும் மக்களினத்தைத் தெளிவாக அறியக் கூடியகாலக் கண்ணாடியாக விளங்குவது தமிழில் உள்ள இலக்கியங்களே. இலக்கியங்கள் வழியாக தமிழரைப்பார்க்கும் போது தமிழ் நிலத்தில் ஓங்கி இருந்த பண்பாட்டை, சமூக, பொருளாதார, இயற்கைக் கோட்பாட்டுடண் இணைந்த தமிழரின் வாழ்வை, வளத்தைஅறியஇயலும்.

சங்ககாலத்திலிருந்து தொடங்கும் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒவ்வொருகாலம் தோறும் அந்தந்த சூழல்களுக்கேற்ப அரசன், தலைவன், தெய்வம், அறவாழ்க்கை, அகவாழ்க்கை, புறவாழ்க்கை, வீரம், இயற்கைவளம், பழக்கவழக்கம், வழிபாட்டுமுறைகள் என்பன போன்றவற்றின் தாக்கம் எப்போதெல்லாம் அதிகரிக்கின்றதோ அப்போதெல்லாம் அது தொடர்பான இலக்கியங்கள் படைக்கப்பட்டன.

எந்த இலக்கியமாக இருந்தாலும் அதில் கையாளப்படும் மொழியின் ஓசை, எழுத்து, சொல், பொருள் போன்றவை பொதுமைப் பண்புடன் துலங்கும் வகையில் இலக்கணக் கட்டமைப்புடன் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளது.

**தமிழிலக்கியத்தின் சிறப்பு**

பொதுவில் இத்தகைய இலக்கியப் படைப்புகள் தனிநபர், தன்னார்வக்குழு, அரசுநிறுவனம்எனும் மூன்றுதளங்களில் உருவாக்கப்பட்டன. சிற்சில இலக்கியம் தனிப்புலவர்களால் உருவாக்கப்பட்டது. அதைப் போலவே கூட்டாக புலவர்கள் குழுக்களும் நூல்களைப் படைத்துள்ளனர்.

இதுபோன்ற படைப்பிலக்கியப் பணிகளுக்கு கொடையாளர்களாக அரசர்கள், அரசாங்கம் விளங்கியுள்ளது. சில அரசர்களே புலமை மிக்கவர்களாக விளங்கி இருந்தமையால் நேரடி இலக்கியப் படைப்பிலும் ஈடுபட்டுள்ளனர். பெரும்பாலான சங்க இலக்கிய நூல்கள் புலவர்கள் அமர்ந்த பெரும் குழுவால் உருவாக்கப்பட்டு அவைகளை பிரிதொரு புலவர்குழு அந்த இலக்கியத் திறனை அதன் மொழியமைப்பை ஆய்வு செய்வர்.

அப்படைப்பு எக்காலமும் தமிழர்களுக்குப் பொதுவில் பயன்பட வேண்டும் எனும் உயரியசிந்தனையால் அதன் இலக்கணக் கட்டமைப்பை ஆய்ந்திடுவர். இவ்வாறு ஒருபடைப்பு ஆய்வுக்குப் பின்னரே மக்களை அடைந்ததால் மொழிப் பயன்பாடு, பொதுமைப்பண்பாடு தமிழரிடம் மிகுந்திருந்தது.

**9. உயர் சிந்தனை**

இலக்கியத்தில்உயர் சிந்தனை என்பது அது எத்தகையபடைப்பாக விளங்கிடினும் மக்கள் சமூகத்திற்கு பயன் விளைவிப்பதாக விளங்குதலே. இந்த அடிப்படைதான் தமிழ் இலக்கியங்களின் கருப்பொருளாக விளங்குகின்றன. தமிழ் இலக்கியங்கள் எத்தகைய காலத்தவையாக இருப்பினும் அவை மானுடம் போற்றும் உயர் சிந்தனைகளின் தொகுப்பாகவே மிளிர்வதைக் காணலாம்.

சங்க இலக்கியங்களில் பாடு பொருளாக விளங்கும் அகத்திணையும், புறத்திணையும், அறவியலும் தமிழர் வாழ்வுடன் இணைந்த உயர் சிந்தனை மரபாகும் . உயர் சிந்தனை மரபுகள் இலக்கியத்தில் நிலை பெற்றிட வேண்டி இலக்கண நெறிகள் பிழையுற பின்பற்றப்பட்டன.

**10. கலை இலக்கியதனித் தன்மை வெளிப்பாடு**

தமிழ் இலக்கியங்களில் திகழும் கலைநயம் தனித் தன்மை பெற்றது. தமிழ் இலக்கியங்களில் தனிப்பாடலாயினும், புலவர்கள் குழுபடைத்து, தொகுத்தபாடலாயினும் அரசர்கள் அரசு உதவியுடன் படைப்புகளை உருவாக்கிய இலக்கியங்களில் இழையோடும் கலைநயமும், கவி நயமும் போற்றத்தக்கவை.

**11. மொழிக்கோட்பாடு**

உலகில் சில இனங்களின் அடையாளமாக மொழி காணப்படுகிறது. அந்த மொழியில் படைக்கப்பட்டுள்ள படைப்புகளும், மொழியின் பயன்பாடும், அதன் பொதுமைப் பண்புகளும் எல்லாகாலங்களுக்கும் பொருந்தும் வகையில் மொழியானது தனக்குள்உரியவாறு கட்டமைப்பைக் கொண்டிருப்பதே அம்மொழியின் அடிப்படைக் கோட்பாடாகும். இந்த அரும்பண்புகள் தமிழுக்குண்டு. மொழியியலார் ஒரு மொழியை மதிப்பிடுகையில் மொழியில் உருவான இலக்கியங்களை திறனாய்வு செய்வர்?.

அதில் அம்மொழிக்குரியஇனம், அது வாழ்ந்த, வாழ்ந்து வரும்சூழல், காலம் எனும் மூன்றையும் நோக்குவர். ஏனெனில் ஒருமொழியான உருவான இலக்கியம் அச்சமூகத்தை மட்டுமே நமக்குத் தெரிவிப்பவை அல்ல. கூடவே அச்சமூகத்தை தொடர்ந்து வரும் மரபார்ந்த பண்பு நலன்கள் பலவற்றையும் தெரிவிக்கின்றன.

எனவே தான் முன்னோர்கள் தமிழ் மொழிகளின் படைப்புகள் சமுதாயத்தில் தாக்கத்தைஉருவாக்கும் வல்லமை கொண்டது என்கிற காரணத்தால் இலக்கியங்கள் கற்பதற்கும், கற்பிப்பதற்கும் வழங்கும்போது பொருளமைதி குறித்த கோட்பாட்டை வகுத்தனர். இந்த கோட்பாட்டை நெறி பிறழாமல் விளங்க இலக்கணத்தை வகுத்தனர். அதனால் தான் தமிழ்மொழி தனக்குள்ளே இலக்கணம் என்கிற கட்டமைப்பை பெற்றுள்ளதால் தரமிக்க இலக்கியப் படைப்புகள் அனைத்தும் சங்ககாலம் முதல் ஓர் ஒழுங்கமைதியுடன் பேணப்பட்டு வருகிறது.

அத்துடன் வளர்ந்துவரும் புதிய துறைகள் எதுவென்றாலும் அதனையும் ஏற்று தனித்தன்மைமாறாமல் தூயதமிழ் சொற்களிலேயே அத்துறைகளை அறியும் வண்ணம் சீரிளமைத்திறனுடன் தமிழ் மொழி விளங்குகிறது. இத்திறனே அதன் கோட்பாடாகும்.

இந்தப் பதினொரு தகுதிப்பாடுகளும் தமிழுக்கு மட்டுமே பொருந்துவனவாகும் என்பது தான் தனிச் சிறப்பு. சமஸ்கிருதத்துக்கு ஏழு தகுதிப்பாடுகளும், லத்தீன், கிரேக்க மொழிகளுக்கு எட்டுத் தகுதிப்பாடுகளும் மட்டுமே பொருந்துகின்றன என்பது மொழியியலாளர் கணிப்பு.

**தமிழ்ச் செம்மொழி வரலாறு**

இந்தியாவின் முதல் செம்மொழி தமிழே. தமிழுக்குப் பின்னரே சமஸ்தம், பாளிபோன்ற மொழிகள் செம்மொழிகளாக இந்திய அரசால் அறிவிக்கப் பெற்றன.

1977 ஆம் ஆண்டு சமஸ்கிருதத்தை இந்தியஅரசுசெம்மொழியாக அறிவித்திருக்கவில்லை. தமிழ் செம்மொழி அறிவிப்பிற்கான போராட்டம் 18ஆம் நூற்றாண்டில் தொடங்கியது. 18 ஆம் நூற்றாண்டு பரிதிமாற் கலைஞர் முதன் முறையாகதமிழ் மொழியை "உயர்தனிச் செம்மொழி"எனும் சொல்லாட்சியோடுஉரைத்தார். கரந்தைத் தமிழ்ச் சங்கம், சைவசித்தாந்த மகா சமாஜம் என பல அமைப்புகள் தமிழை செம்மொழியாக அறிவிக்கவும், இந்திய பல்கலைக் கழகங்களில் தமிழுக்கு முறையான இடம் தரவும் அறிவுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றின.

1916 இல் தனித்தியங்கும் தமிழுக்குபிறமொழிக் கலப்பால் விளைந்த தீங்குகளைக் களைய"தனித் தமிழ் இயக்கத்தை" மறைமலையடிகள் தோற்றுவித்தார். 1918 இல் குலசேகரப்பட்டணத்தில் நடைபெற்றசைவசமய மாநாட்டில், தமிழ் மொழியை ஒரு செம்மொழியாக அறிவிக்கவேண்டும் என்றதீர்மானத்தில் மறைமலையடிகள் கையொப்பமிட்டார்.

இது அன்றைய ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. 1951 இல்சாகித்திய அகெடெமி உருவாக்க மாநாட்டில், அபுல்கலாம் ஆசாத், "தமிழ் செழுமையும் தொன்மையும் மிக்க இலக்கியங்களைக் கொண்டது. அம்மொழியின் கவிதைகள் வெளிநாட்டுமொழிகளில் மொழியாக்கம் செய்வதற்குரிய தகுதி பெற்றவை. தமிழ் உண்மையிலேயே ஒரு செம்மொழி என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்" என்று குறிப்பிடுகிறார்.

1955 இல் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்த ஒரு மாநாட்டில், அபுல் கலாம் ஆசாத்தின் உரையைச்சுட்டி, தமிழை செம்மொழியாய் அறிவிக்க வேண்டும் என்றுதன் தலைமையுரையில் குறிப்பிட்டுப் பேசினார்.

1966 இல் தேவ நேயப் பாவாணர், "உலகின் முதன்மையான செம்மொழி"எனும் தன் ஆய்வை வெளியிட்டார். இதில் பல உறுதியான சான்றுகளுடன், தமிழே உலகின் முதன்மொழி என்பதை நிறுவினார்.

1977 ஆம்ஆண்டு பாரிசில் நடந்த கூரியர் ஆசிரியர் மாநாட்டில், ஜீன்பிலியோஸா எனும் அயல் நாட்டு தமிழறிஞரோடு உரையாடும் போதுதான் மணனை முஸ்தபா சில உண்மைகளை உணர்ந்தார். செம்மொழி எனும் காரணத்தால் , சமஸ்கிருதம் உலகமெங்கும் உள்ள பல்கலைக் கழகங்களில் முதன்மை பெறுகின்றது. ஆனால், தமிழுக்கு அத்தகைய உயர்நிலை இல்லை .

1981 இல் மதுரையில் நடந்த ஐந்தாம் தமிழ் மாநாட்டில் தமிழை செம்மொழியாக அறிவிக்கும் கோரிக்கை குறித்து மணனை முஸ்தபா உரையாற்றினார்.

அப் போதைய முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரனார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை...

காலை 9.25 மணி தொடக்கம் 10.33 மணி வரையான சுபவேளையில் இடம்பெற வுள்ளது.

இன்று காலை 6.00 மணி தொடக் கம் 7.10 மணி வரை இராஜகோபுர கும்பாபிஷேகமும் காலை 9.25 மணி தொடக்கம் 10.33 மணி வரை மூலாலய கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளது.

இதன்போது துர்க்காதேவியின் பக் தர்கள் அனைவரும் தங்கள் குடும்பத்த வர்களுடன் தமிழ்க் கலாசார முறைப் படி வருகை தந்து வழிபாடாற்று மாறு ஆலய பரிபாலன சபைத் தலைவர் செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ந-7,10)

## வெள்ளவத்தை...

டுள்ளது.

இதனையடுத்து நிலையத்தினுள் பணிபுரிந்தோர் உள்ளிட்ட அனை வரும் பத்திரமாக மீட்கப்பட்டதாக கொழும்பு மாநகர சபையின் தீய ணைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் தீயினைக் கட்டுப்படுத்த 15 தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப் பட்டது எனவும் எனினும் குறித்த ஆடை விற்பனை நிலையத்தின் மூன்று மாடிக் கட்டிடம் தீயினால் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகவும் தீயணைப்பு பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை தீப்பரவலுக்கான கரணங்கள் இதுவரை தெரியவராத நிலையில் வெள்ளவத்தை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கோடிக்கணக்கான பொருட் சேதம் ஏற்பட்டிருக்கக்கூடும் எனவும் மதிப் பிடப்பட்டுள்ளது. (ந-7,10)

## உலக சாதனை...

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் தனது தாடியாலும் தலை முடியினா லும் பட்டா ரக வாகனத்தை ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை இழுத்து உலக சாதனை படைத்துள்ளார்.

தென்மராட்சியைச் சேர்ந்த 60 வய தான செல்லையா திருச்செல்வம் என்ப வரே இந்த சாதனையைபடைத்துள்ளார்.

கொழும்பு காலி முகத்திடலில் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு வாக னத்தை தனது தாடியாலும் முடியாலும் இழுத்து உலக சாதனையை நிகழ்த் துவதே திருச்செல்வத்தின் நோக்கமாக. அமைந்தது.

இதற்கமைய 1550 கிலோ எடைடை டைய பட்டா ரக வாகனத்தை 500 மீற்றர் தூரத்துக்கு தாடியாலும், 500 மீற்றர் தூரம் வரை தலை முடியாலும் இழுத்து திருச்செல்வம் சாதனை படைத்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் உலக சாதனை புத்தக நிறு வனப் பிரதிநிதிகள் இந்த சாதனை நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வை Cholan Book of World Record (CBWR) நிறுவனத்தின் பிரதிநிதிகள் நேரடியாக அவதானித்து திருச்செல்வத்தின் சாதனையை அங்கீ கரித்து, பதக்கத்தையும் விருதையும் பட்டயத்தையும் வழங்கி வைத்தனர்.

செல்லையா திருச்செல்வம் கடந்த 10 ஆண்டுகளாக தனது தலைமுடியா லும், தாடியாலும் வாகனங்களை இழுப் பது, தனது உடலின் மீது வாகனத்தை ஏற்றுவது போன்ற சாதனைகளை நிலைநாட்டி வருகிறார்.

60 வயதான சாதனை நாயகன் அண்மையில் சாவகச்சேரி பஸ் நிலை யத்தின் அருகில் 1550 கிலோ எடை யுள்ள வாகனத்தை 1500 மீற்றர் தூரம் வரை 45 நிமிடங்களில் இழுத்து சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

## சட்டவிரோத...

நேற்றைய தினம் விடுமுறை நாளாக இருந்தபோதும் விடுமுறையை கருத் தில் கொள்ளாது சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண் டிருந்தவேளையே சிறப்பு அதிரடிப் படையினரும் மருதங்கேணி பொலி ஸாரும் குறித்த ஆறு உழவு இயந் திரங்களுடன் ஆறு நபர்களை கைது செய்துள்ளனர்

மேலதிக விசாரணைகளை மருதங் கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,10)

## அறிவியல்நகர்...

கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத் தில் பொறியியல் துறையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு பொறியியல் துறை தேவையென பேராசிரியர் துரைராஜாவின் முப்பத்தி மூன்று வருட கனவு நிறைவு பெற்று, இன்று பல ஆயிரம் மாணவர் களை பிரசவித்துவிட்ட கிளிநொச்சி பொறியி யல்பீடம் அதனுடன் இணைந்த தொழில் நுட்ப பீடம் மற்றும் விவசாய பீடம் உள் ளடங்கிய யாழ்ப்பாண பல் கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகம் எதிர் காலத்தில் கிளிநொச்சி பல்கலைக் கழகமாக மாறும் என்றார்.

## இராணுவ...

பங்களிப்பு செய் வதை ஏற்க முடி யாது என தமிழ் மக்கள் கூட்டணி யின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வலி.வடக்கு பகுதியில் உள்ள தமிழ் மக்களின் காணிகளை விடு விக்கும் நிகழ் வில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க ஆற்றிய உரை தொடர்பில் அவரிடம் வின வியபோதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

நான் முதல மைச்சராக இருந்தபோது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க இஸ்ரேல் நாட் டைப் போன்று இராணுவமும் மக்களும் இணை ந்து விவசாய நட வடிக்கைகளில் ஈடுபடும் கட்ட மைப்பை ஒன்றை வடக்கில் ஏற் படுத்துவோம் என அன்று என்னிடம் கேட்டிருந்தார்.

நான் அதை நிராகரித்ததுடன் வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவரிடம் தெரி வித்த நிலையில் அவர் என்னுடன் பேசுவதை நிறுத்திவிட்டார்.

தற்போது ஜனாதிபதியாக ... நிலையில் வலி.வடக்கில் ஒரு பகுதி மக்களின் விவசாயக் காணிகளை விடுவித்து விட்டு விவசாய நடவடிக்கையில் இரா ணுவத்தை ஈடுபட வைப்பது என்பது தொடர்ந்து விடுவிக்கப்பட்ட பகுதி களில் இராணுவ இருப்பை தக்க வைக் கும் செயற்பாடாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் கருத்தை ஏற்க முடியாது விடு விக்கப்பட்ட மக்களின் காணிகளில் மக்கள் சுதந்திரமாக விவசாய நட வடிக்கைகளில் ஈடுபட வேண்டும், உதவி என்ற போர்வையில் தொடர வுள்ள ஆக்கிரமிப்பை ஏக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-7,10)

## புளியம்பொக்...

வரலாற்றுச் சிறப்புமிக்க கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம் பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழாவானது நேற்று முதல் இன்று அதிகாலை வரை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சகிதம் இடம்பெற்றது. (ந-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.03.24
சீட்டிழுப்பு இலக்கம் 5429
K 0 0 5 1 3 7

அத சம்பத
K 5 1 3 7
சீட்டிழுப்பு இலக்கம் 004
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.03.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1459
W 20 55 66 73 W
Double Chance 66412

மெகா பவர்
திகதி 24/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1777
L 22 13 27 29 48
19532

லக்கி 7 VIP
திகதி 2024.03.24
சீட்டிழுப்பு இலக்கம் 0255
M 2 1 7 1 9 5 M

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3671
சீட்டிழுப்பு திகதி 24.03.2024
Q 09 15 49 67
Q 11174
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.24
சீட்டிழுப்பு இலக்கம் 0738
மீனம் 16 28 48 57 மீனம்
38056 01

உத்தியோகபூர்வ முடிவுகள்
24.03.2024 வெற்றி வாரம் 137 வர்ணம் பழுப்பு
L 3 4 6 6 4 7
S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,812,108.00
DLB தொலைபேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2403 வர்ணம் ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 24.03.2024 தினம் ஞாயிறு
06 12 17 20 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,042,070.40

சனிதா
திகதி 2024.03.24 வெற்றி வாரம் 4564
29 45 60 63 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,035,586.40

சசிரி
458
2024.03.24
கபிலம்
17 31 40
06
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,065,320/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4115 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.03.24 தினம் ஞாயிற்றுக்கிழமை
09 11 24 42 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 13,609,738.00

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 11 23 30 51 64
1579
மஞ்சள்
24.03.2024 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 513,774,113.40

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2229
சீட்டிழுப்பு திகதி: 2024.03.24
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 101,446,076.80
13 19 44 50 N


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உங்கள் ஆலய திருவிழாக்களில்...

(18.04.2024 வரை)

ஈழநல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு தொடர்பு கொள்ளலாம்.

கலைமாமணி DR.S.S. சர்மா(குருஜீ) (183)

**075 99 811 77**

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு சம்பியன் வீதியில் 1 பரப்பு 13 குழிக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: (C-0003)

**076 702 3565**

## இலவச மருத்துவ ஆலோசனைகள்

### யாழ் நகரம்

தாமதமடையும் குழந்தைப் பாக்கியம் தொடர்பான விசேட இலவச ஆலோசனைகள்

அதி நவீன IVF முறைகளும் அதிகூடிய வெற்றி வீதங்களும் தரும் சிகிச்சை முறைகள் தொடர்பான விளக்கங்கள்.... (207)



**Dr.G.Sujaharan**

IVF CLINIC

No.15/3, முதலாம் ஒழுங்கை,
யாழ் பருத்தித்துறை வீதி,
யாழ் நகரம்
(ஆஸ்பத்திரிச் சந்தி)

Date : 29.03.2024
வெள்ளிக்கிழமை
Time : 9.00am - 7.00 pm

**077 766 7528/ 077 364 4154**

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0004)

**076 825 7716** (ஆகாஸ்)

## மணப்பெண் தேவை

- பருத்தித்துறை, இந்து, கௌரவகுலம், 1991, புனர்பூசம், MBBS Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile No - 33737
- திருநெல்வேலி, இந்து, கௌரவகுலம், 1987, ஆயிலியம், MBBS Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile No - 34953
- பருத்தித்துறை - அச்சுவேலி, இந்து, கௌரவகுலம், 1991, சதயம், Graduate, Quantity surveyor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile No - 27903
- புலோலி, இந்து, கௌரவகுலம், 1990, ரோகிணி, BBM finance MBA, canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile No - 27898
- மிருசுவில், இந்து, கௌரவகுலம், 1988, திருவோணம், BSc in Information Tecnology, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile No - 32307
- சாவகச்சேரி - வேலணை, இந்து, கௌரவகுலம், 1990, திருவோணம், B.BM, B.Eng(University of Sunderland) Germany citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile No - 31102
- கோப்பாய், இந்துகௌரவகுலம், 1982, சுவாதி, MBBS Doctor, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile No - 31058
- வண்ணார்பண்ணை, இந்து, கௌரவகுலம், 1976, ரேவதி, MBBS Doctor, Divorce /uk citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கரவெட்டி, இந்து, கௌரவகுலம், 1984, விசாகம், BCA (Bachelor of Computer Application) Business, uk citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile No - 37556 (233)

www.thaalee.com | ✆- 077 539 3728 | - 077 803 8193

## முதியோர் பராமரிப்பு சேவை

குடும்ப உறுப்பினர்களில் ஒருவராக வைத்து சிறப்பான முறையில் பராமரிக்கப்படுவர்

இடம் : சாவகச்சேரி

மேலதிக தொடர்புகளுக்கு : (C-0001)

**077 923 5554**

## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/- (C-0007)





வயது: 21 முதல் 40 வரை

தொடர்புக்கு:-

**0777068777**

## V2 VISA SERVICES

### கனடா

077 77 20 322 | 077 77 19 322 — Visit Visas, Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**


- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0007)

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378 | 076 097 3127**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




### மனோகரன் லாவன்சன்

ஆங்கில ஆசிரியர்
கிளி/பூநகரி மத்திய கல்லூரி

HND in English, B.A

16.03.2024 அன்று யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 38 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B.A) பட்டம் பெற்றுக்கொண்ட மனோகரன் லாவன்சனை மென்மேலும் பல பட்டங்கள் உயர் பதவிகள் பெற்று கல்விச் சேவையை அலங்கரிக்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

வாழ்க வளமுடன்

வாழ்த்துவோர் :
அம்மா, அப்பா,
அத்தான் முரளி,
அக்கா சிந்து,
மருமகள் வைஷு

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு

தோற்றம் 02 . 01 . 1951



மறைவு 27 . 02 . 2024

கடந்த 27.02.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பவிளக்கு

### அமரர் சுப்பிரமணியம் பரதனாலிங்கம்

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியை எதிர்வரும் 26.03.2024 செவ்வாய்க்கிழமை அம்பலவன் பொக்கணை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிரியைகள் 28.03.2024 வியாழக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது குலவிளக்கின் இழப்பால் துன்புற்றிருந்த வேளை நேரடியாகவும் தொலைபேசியூடாகவும் சமூகவலைத்தளங்கள் மூலமும் எமக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறிய அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

10 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

தகவல்:
குடும்பத்தினர்
077 383 7468 (C-0005)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.